
# திருக்குறள் விழா மலர்

# 2019



விரிகுடாக் குறள் கூடம்

www.bayareakuralkoodam.org


Tabla
Indian Restaurant
Amazing and delicious dishes only with us !
Our Locations -
SAN MATEO, CA
450 S Norfolk St,
San Mateo, CA 94401
Phone: (650) 393-4338
PLANO, TX
9720 Coit Rd#110,
Plano, TX, 75025
Phone: (469) 910-0216
CHARLOTTE, NC
15025 Lancaster Hwy D8,
Charlotte, NC 28277
Phone: (704) 752-3556
Tabla Indian Restaurant

# விரிகுடாக் குறள் கூடம்

## இது கலைஞர்களின் களம்

### விழாமலர் தயாரிப்பில் உறுதுணை

முதன்மை ஆசிரியர் : காவேரி கணேஷ்

ஆசிரியர் குழு : மல்லிகா பாஸ்கரன்
திருமுடி துளசிராமன்
சிவா மிளிர்
பூர்ணிமா சண்முகம்

வாழ்த்து : தமிழ்க்கடல் நெல்லை கண்ணன்

- வள்ளுவம் குறித்த கவிஞர் அறிவுமதியின் படைப்புகள்

கட்டுரையாளர்கள் :

- நாஞ்சில் நாடன்
- கதிரவன் எழில்மன்னன்
- குமரகுருபரன்
- முனைவர் சொக்கலிங்கம் கருப்பையா
- தேவி நாகப்பன்
- இளங்கோ
- கௌரி சேஷாத்ரி
- சித்ரா
- குறளரசிடன் ஓர் உரையாடல்
  உரையாடியவர் : காவேரி கணேஷ்
- கனகலச்சுமி
- ராஜகுமாரி நாகசாமி
- அழகுதன்யா ஸ்ரீனிவாசன், வயது 5
- மிருதுளா மோகன்குமார், வயது 12
- ஜெயலக்ஷ்மி சரவணன்
- ஜலத்தூர கிருஷ்ணசாமி, பொள்ளாச்சி
- ரிஷி சந்திரசேகர், வயது 12
- ஹரிணி சதிஷ்குமார்
- ஷண்முகப்ரியா
- ஹேமா கண்ணன்

மற்றும்

ஓவியப்போட்டியில் பங்கேற்ற குழந்தைகள்.
அவர்தம் படைப்புகள்

வடிவமைப்பு : M. Fairy

விளம்பரம் மற்றும் ஏனைய தொடர்புக்கு :
support@bayareakuralkoodam.org

## முன்னுரை



## குறள் கூறி குளிர்வித்த குரல்கள்!

### திருக்குறள் விழா-2019

அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் விரிகுடாக் குறள் கூடத்தின் சார்பில் எங்களது அன்பு வணக்கம்.

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை

கல்வி அறிவு என்பது எத்துனை சிறப்புகள் கொண்டது என்பதை வள்ளுவன் ஏழு வார்த்தைகள் கொண்டு செதுக்கி நம் முன் நிறுத்தி உள்ளான்!

விரிகுடாக் குறள் கூடம் கடந்த ஐந்து வருடங்களாக் குறள் மூலம் கல்வி கற்று அதன் பொருள் உணர்ந்து நம்மையும் நம் அடுத்த தலைமுறையினரையும் நல் முறையில் வழிநடத்திச் செல்லும் ஒரு அருமையான வாய்ப்புக்கு ஒரு அழகான மேடை அமைத்து பணி செய்து கொண்டிருக்கின்றது.

பொதுவாக அமெரிக்கக் கல்வி முறையில் கற்று தேர்ந்து சாதித்துக் கொண்டிருக்கும் நம் பிள்ளைச் செல்வங்கள் கொண்டுள்ள ஒரே ஒரு குறை நம் இந்தியப் பாடத்திட்டத்தில் இருப்பது போன்ற போதனை வகுப்புகள் இல்லாதிருப்பதுதான்.

நட்பின் சிறப்பு, ஒற்றுமையின் பலம், வள்ளல் குணத்தின் மேன்மை, கல்வியின் பயன், நன்றி உணர்வின் அவசியம், அப்பழுக்கற்ற செல்வத்தின் அருமை என வாழ்வின் பொருள் அத்துணை விடயங்களையும் எடுத்துக்காட்டி "திருக்குறள்" என்ற ஊர்வலம் நடத்தியுள்ளான்.

இவை அனைத்தும் பெற்றோர்களாகிய நமக்கு போதனை வகுப்புக்கள், நீதிக்கதைகள் வழியாகக் கிடைக்கப் பெற்றன.

புலம் பெயர்ந்து அன்னிய மண்ணைத் தமதாக்கிக் கொண்டு வாழும் நம் பிள்ளைகளுக்கு திருக்குறள் மட்டுமே வாழ்வியல் பொருள்களைக் கொண்டு சேர்க்கும்!

திருக்குறளை அதன் பொருள் உணர்ந்து கற்பதால் தமிழ் மொழியையும், வாழ்வியல் பொருளையும் ஒன்று சேர நம் குழந்தைகளின் ஆழ்மனதிற்கு எடுத்துச் செல்லும். இந்த சிறப்பு வாய்ந்த திருக்குறள் போட்டியானது ஆறாவது முறையாக விரிகுடாப் பகுதியில் 90 க்கும் மேற்பட்ட தன்னார்வ தொண்டர்களின் கை கோர்த்தலிலும், புரவலர்களின் பெருந்துணையுடனும் நடந்தேறியுள்ளது.

திருக்குறள் விழா மலர்-2019 இல் தமிழ்க்கடல் திரு. நெல்லைக்கண்ணன் அவர்தம் வாழ்த்துரையுடன் பல கட்டுரைகளையும் குழந்தைகளின் தூரிகையில் முகிழ்த்த வள்ளுவ ஓவியங்களுடனும் மலர்ந்துள்ளது.

இங்கு நாங்கள் முக்கியமான மூன்று காரணிகளைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்.

முதலாவதாக, குழந்தைகளுக்கு 'திருக்குறள்' கற்றுத் தர வேண்டும் என ஆர்வம் கொண்ட பெற்றோர்கள்.

இரண்டாவதாக, அருமையான முயற்சி சீரிய முறையில் சிறப்புற்று நடக்க வேண்டும் அதற்குத் தோள் கொடுக்க வேண்டும் என விரும்பி உதவுகின்ற தன்னார்வலர்கள்.

மூன்றாவதாக, நல்ல ஒரு எதிர்கால தமிழ் சமூகத்தை உருவாக்குங்கள் நாங்கள் இருக்கின்றோம் என ஆதரவு கரம் நீட்டும் புரவலர்கள்.

விரிகுடாக் குறள் கூடம் இந்த மூன்று காரணிகளை இணைத்து அரிய முயற்சியை மேற்கொண்டு ஆறாவது வருடமாக நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கின்றது!

சிறப்பு மிக்க இந்தப் பணியை நடத்த துணை நிற்கும் பெற்றோர்கள்,தன்னார்வ தொண்டர்கள் மற்றும் புரவலர்களை விரிகுடாக் குறள் கூடம் நன்றி சொல்லி வணங்குகிறது.

அன்புடன்

***திருமுடி துளசிராமன்***
நிறுவனர்,
விரிகுடாக் குறள் கூடம்.

# வாழ்த்துரை



விரிகுடாக் குறள் கூடம்
விரியட்டும் உலக மெங்கும்

அரிதான குறளைப் போற்றும்
அருமையால் புகழ் கொள்ளட்டும்!

தரிசான மனங்கள் எல்லாம்
தமிழாலே பயிர் காணட்டும்!

விரியட்டும் மனங்கள் அன்பால்
வெல்லட்டும் அறிவால் எங்கும்!

“அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி
குறுகத் தறித்த குறள்” என்கின்றார் அவ்வைப் பெருமாட்டி

“வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என்கின்றார் மகாகவி பாரதியார்

தமிழர்களின் குலச் சொத்தே வள்ளுவம்தான்

வெளிநாட்டில் வாழும் காலத்திலேயும் குழந்தைகளுக்கு குறள் சொல்லித் தரும் பாங்கைக் கொண்ட விரிகுடா குறள் கூடம் வாழ்த்துதற்குரியது, பாராட்டுதலுக்குரியது.

மதம் சாதி மொழிகளுக்கு அப்பாற்பட்ட குறள் நமக்கு உரிமை என்று தோன்றிடினும், அது உலகத்தார்க்கும் உரிமையானதைக் குறிக்கவே உலகப் பொது மறை என்றழைத்தோம்.

தேசத் தந்தை பல புகழைப் பெற்றாலும் குறளைத் தமிழ் மொழியில் படிக்க இயலாது போனதற்கு வருந்துகின்றார்


கற்க வேண்டும் குழந்தைகளே! குறட்பாக்களை கற்க வேண்டும்.


வெல்க விரிகுடாக் குறள் நண்பர்கள்!

தமிழ்க்கடல் **நெல்லை கண்ணன்**

# புலரி, மலரி, அலரி

- நாஞ்சில் நாடன்





காலையில் கண் விழித்ததும், கை பேசியில் முப்பதுக்கும் குறையாத 'Good Morning' செய்திகள் காத்திருக்கின்றன. வெறுமனே சொற்றொடர்களாக, அற்புதமான மலர்ச் சிரிப்புகளுடன், இயற்கைக் காட்சிகளுடன், ஒப்பற்ற கடவுளின் சிலைகளுடன், ஓவியங்களுடன், சான்றோர் வாக்குகளுடன், அறிவுரைகளுடன், கவி வரிகளுடன் எனப் பற்பல வகைகளாக, பண்பு கருதி நாமும் மறுமொழி இடுகிறோம். அனுதினமும், எட்டுத் திசைகளிலும் இருந்து உலகம் முழுக்க எத்தனை ஆயிரம் கோடி Good Morning செய்திகள் குறுக்கும் நெடுக்குமாக, மேலும் கீழுமாகப் பறந்து கொண்டிருக்கும்! ஒருவேளை நடப்பாண்டின் தமிழ்நாடு அரசின் கடன் தொகையான 40 லட்சம் கோடியை விடவும் அதிகமாக இருக்கலாம்.

Good Morning எனும் இந்த ஆங்கிலச் சொற்றொடருக்கு இணையாகப் பல நண்பர்கள், காலை வணக்கம், இனிய காலை வணக்கம் என மொழியினை உருமாற்றி அனுப்புகிறார்கள். உண்மையில் நமது மரபு, நேரில் சந்திக்கும் போதோ, கடிதங்கள் எழுதும்போதோ, வணக்கம், வந்தனம், நமஸ்காரம் எனும் சொற்களைப் பயன்படுத்துவது. கிறிஸ்துவர்கள் ஸ்தோத்திரம் அல்லது தோத்திரம் என்பார்கள். இஸ்லாமியர்கள் சலாம் அல்லது

# COCONUT HILL
INDIAN GROCERY

**Party Hall Available**
(70 - 100 people)

Our NEW San Jose location is

**NOW OPEN**

SERVING YOU IN THREE CONVENIENT LOCATIONS

3

Fremont (Warmsprings), Sunnyvale & San Jose

| 46129 Warm Springs Blvd<br>Fremont, CA 94539<br>Tel: 510.656.9671<br>Store Hours: 9:00AM - 10:00PM | 554 S Murphy Ave<br>Sunnyvale, CA 94086<br>Tel: 408.738.8837<br>Store Hours: 9:00AM - 10:00PM | 3325 San Felipe Rd<br>San Jose, CA 95135<br>Tel: 408.528.9600<br>Store Hours: 9:00AM - 10:00PM |
|---|---|---|

WE WELCOME YOU TO OUR STORES UNIQUE & QUALITY PRODUCTS

● Elantha Vada ● Samahan ● Thoothuvalai ● Keezhaanelli ● Nerunji ● Sitrathai ● Vasambu ● Arisi Thipeli ● Kandanthippili ● Kamarkattu



We carry
Kottakal Ayurvedic
medicines

WELCOME TO OUR NEW SAN JOSE LOCATION









Farm raised fresh Halal
**Naattu Kozhi & Goat Meat**
(now available all 7 days)





We sell Manthakali Keerai, Thandu Keerai, MuLa Keerai, Siru Keerai, Murungai Keerai, Vallarai Keerai, Brahmi Keerai, Pulicha Keerai, Ponnangani Keerai, Chukka Keerai, Parupu Keerai, Venthaiya Keerai, Kadughu Keerai, Kodi Pasalai Keerai and more...

Free Door Delivery
Available for orders over $30

சலாம் அலைக்கும் என்பர். எவ்வாறாயினும் Good Morning எனும் ஆங்கில மரபைத் தமிழில் பெயர்ப்பதே காலை வணக்கம் என்பது.

என்க்குத் தோன்றும், Good Morning என்பதோர் வாழ்த்து Happy Birthday என்பது போல Happy Wedding Anniversary என்பது போல. இதனுள் வணக்கம் எனும் சொல் எங்ஙனம் வந்து புகுந்தது. அது போன்றதே Good Night அல்லது இரவு வணக்கம் என்பதுவும்.

சில நண்பர்கள், நற்காலை அல்லது நல்லிரவு என்பார். அன்மையில் ஒரு நண்பர் நற்புலரி என்றார். ஆகா என்று அதிசயித்தேன். நல்லிரவு என்பதை நல்லிரா என்றார் அவர். இரா என்றாலும் இரவு தான். காமத்துப்பால் திருக்குறள் பேசுகிறது:

'மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னலல்லது இல்லை துணை'

நான் மட்டும் உறங்காமல் இந்த இரவுக்குத் துணையாக இருக்கிறேன் என்பது பொருள்.

திருக்குறள், இரவு என்னும், அளபெடை பயன்படுத்தி இரா, அ என்றும் சொற்களைப் பெய்கிறது. அல் என்றாலும் இரவு தான். அல்லும் பகலும் என்றால் இரவும் பகலும் என்றே பொருள். நிசி என்றாலும் இரவே. நடு நிசி என்றால் நள்ளிரவு. இரவைக் குறிக்க இராத்திரி என்போம். சிவன் இரவையே சிவராத்திரி என்போம்.

அதே போல், காலை என்பதை குறிக்க அற்புதமான பிற சொற்களும் உண்டு தமிழில். வைகறை எனும் சொல்லுண்டு. 'வைகறைத் துயில் எழு' என்பது ஔவையாரின் ஆத்திசூடி. காலையில் துயில் நீத்து எழுவாய் என்பது பொருள். வைகறை எனும் சொல்லைக் காலை எனும் பொருளில் சங்க இலக்கியங்கள் பயன்படுத்தியுள்ளன.

விடியல் எனும் சொல்லும் காலையைக் குறிப்பதுவே. விடியல் எனும் சொல்லையும் சங்க இலக்கியங்கள் ஆள்கின்றன. புறநானூற்றில் கல்லாடனார் பாடல்,

'வெள்ளி தோன்ற, புள்ளுக்குரல் இயம்பப்
புலரி விடியல்'

என்கிறது. கீழ்வானத்தில் வெள்ளி முளைக்க, புள்ளினங்கள் இயம்ப, அதிகாலை விடியல் வந்தது என்னும் பொருளில். அகநானூற்றில் ஆவூர் மூலங்கிழார் பாடல், 'வயங்கு கதிர் காந்த வாடை வைகறை' என்கிறது. சூரிய ஒளியினை மறைக்கும் மாமழை பெய்யும், வாடைக் காற்று வீசும் விடியல் என்பது பொருள்.



புலரி என்பதுவும் காலையைக் குறிக்கும் அற்புதமான சொல். புலரா, புலர்வது, புலராமை, புலரியின், புலர்வு, புலர்பு, புலர்ந்து, புலர், புலர்தலின் போன்றவை புலரியுடன் தொடர்புடைய அற்புதமான சொற்கள். அவற்றை இன்றளவும் சங்க இலக்கியங்கள் நமக்காகக் காத்து வைத்துள்ளன.

பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான மலைப்படு கடாம் எனும் நூலில், இரணிய முட்டத்துப் பெருங் கௌசிகனார் எனும் புலவர், பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவோன் நன்னன் செய் நன்னனைப் பாடுகிறார்.

'பனி சேன் நீங்க இனிதுடன் துஞ்சிப்
புலரி விடியல் புள்ளோர்த்துக் கழிமின்'

என்பது பாடல் வரி.

'பனி விரைவில் அகன்று, இனிதாக உறங்கி, அதிகாலை விடியலில் புள்ளினம் ஒலிக்கக் கேட்டு' என்று பொருள் சொல்லலாம். எனவே நமக்கு தோன்றுகிறது, 'நற்புலரி' என்று வாழ்த்துவது அற்புதத் தமிழ் மாற்றாக இருக்கிறது என்று.

புலரி போன்றே இனிமையான சொற்கள் உண்டு நம்மிடம். மலரி என்றொரு சொல்லைப் பெய்கிறார் கம்பன் தனது இராமகாதையில். மலரி என்றால் மலர் வனம் என்று பொருள். அலர் என்றொரு சொல் கேட்டிருக்கலாம். மலர் என்பதே பொருள். தமிழ் பேரகராதி, அலர் என்ற சொல்லுக்குத் தரும் பொருள்கள் - மலர், அம்பல் (பலரும் அறியப் புறம்பேசுதல்), மகிழ்ச்சி, நீர், மஞ்சள், மிளகு என. அலர்தல் என்றால் மலர்தல், பரத்தல், பெருத்தல், விளக்குதல், சுரத்தல் என்று பல பொருள்களும் உண்டு.

அலர்த்தி என்றால் மலர்ச்சி. அலர்த்தல் எனில் மலரச் செய்தல். அலர்ந்த பூ என்றால் விரிந்த பூ. விடி பூ என்பார்கள் எங்கள் பக்கம். அலர்மகள் எனின் இலக்குமி. அலர்மேல் மங்கை என்றாலும் அவளே. அலர்மேல் மங்கையைத்தான் வழக்கில் அலமேலு என்கிறோம். அலரவன் எனில் நான் முகன். அலரி எனும் சொல்லுக்கு, பூ, ஒருவகைப் பூஞ்செடி, சூரியன், கண்வரி, அழகு, தேனி, நீர்வாலி, கோதுமை என எட்டுப் பொருள்கள் இருக்கின்றன.


எனவே Good Morning எனும் பதத்திற்க்கு மாற்றாக, காலை வணக்கம் என்று சொல்வதை விடவும் 'நற்புலரி' எனும் ஆட்சி திறனுடையது.

# East Bay Dental

## Dr. Kamlesh Jinjuwadia, DDS

(510) 818-9000

(925) 523-3450



Creating Beautiful

**Smiles**

with Gentle Care!

### Fremont Office

**East Bay Dental**
3500 Mowry Ave. Ste A
Fremont, CA 94538
(510) 818-9000

www.eastbaydental.com

Free Invisalign Consultation

Free Dental Implant Consultation

Free Electric Toothbrush
with Xray Exam and Teeth Cleaning
(not valid with any other offer)

### Pleasanton Office

**Valley Smile Dental**
1807 Santa Rita Rd, Ste C
Pleasanton, CA 94566
(925 523-3450

www.valleysmiledental.com

# தொழில்முனைவோர்க்கு வள்ளுவரின் வழிமுறைகள்

- கதிரவன் எழில்மன்னன்



நான் ஆரம்ப நிலைத் தொழில்முனைவோர்க்கான யுக்திகளைப் பற்றி தென்றல் பத்திரிகையில் பல கட்டுரைகளை எழுதியுள்ளேன். ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் அத்தகு வழிமுறைகளை வினைத்திட்பம் என்னும் அதிகாரத்தில் காட்டிவிட்டார். அவற்றை உணர்ந்த பின் அதற்கு மேல் நான் என்ன கூறிவிட முடியும் என்ற பணிவுணர்வு தோன்றுகிறது!

வள்ளுவர் ஆரம்ப நிலைத் தொழில்முனைவோர்க்கான, வினைத்திட்ப அதிகாரத்தில், என்னென்ன வழிமுறைகளை வழங்கியுள்ளார் என்று ஒவ்வொன்றாகக் காண்போம்.

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றவை எல்லாம் பிற.

ஒருவர் ஆரம்ப நிலைத் தொழில் முனைப்பில் இறங்கி விட்டால் அவருக்கு பலத்த மன உறுதி இருக்க வேண்டும். இல்லா விட்டால் நிறுவனம், சந்திக்க நேரும், பலப்பல இடையூறுகளையும் சமாளிக்க இயலாது.

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.

இடையூறு பற்றி குறிப்பிட்டோம். அவை வரும் முன்பே எதிர்நோக்கி, திட்டங்கள் வகுத்து வராமலிருக்க முயலுதல், அப்படியே வந்து விட்டாலும் மனம் தளர்ந்துவிடாமல் நிவர்த்திக்க முயலுதல் இவை இரண்டும் தொழில்முனைவோர்க்கு இருக்க வேண்டிய முக்கியமான பண்புகள்.

கடைக்கொட்க செய்தக்கதாண்மை இடைக்கொட்க
எற்றா விழுமந் தரும்.

இது ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு மிக மிக முக்கியமானதொரு கோட்பாடு! வள்ளுவர் கூறுவது போல், ஒரு செயலை செய்து முடிக்கும் வரை அதைப் பற்றி வெளியார்க்குத் தெரிந்துவிடும்படி மூச்சு விடக்கூடாது! ரகசியமாக செயல் பட்டு, வெற்றிகரமாக முடித்த பின், பிரகடனப் படுத்துவதே சாமர்த்தியம் அல்லவா? இதை தொழில்ரீதியில் ஸ்டெல்த் (stealth) என்பார்கள். இன்டெல் (intel) நிறுவனத்தில் நான் வேலை பார்த்த போது Loose Lips Sink Chips என்று எங்கள் மண்டையில் தட்டி இந்தக் கோட்பாட்டை வலியுறுத்தினர். வள்ளுவர் எவ்வளவு அழகாகக் கூறியுள்ளார் பாருங்கள்!

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

அதாவது, வாய்ச் சவாடல் விடுவது மிக எளிது! ஆனால் சொன்னதை (அல்லது நிறுவனம் செய்வதாக எடுத்துக் கொண்ட காரியத்தை), சொன்னது போல் (அல்லது திட்டமிட்டது போல்) செய்து முடிப்பது கடினம்! அடுத்து குறளில் இது பற்றி மேற்கொண்டு விளக்குகிறார் வள்ளுவர்.

எண்ணிய எண்ணியாங்கு எய்து எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

சென்ற குறளில் சொல்வதைச் செய்தல் கடினம் என்று கூறியவர் இப்போது, அப்படி சொன்னதை, எண்ணியதை, அல்லது திட்டமிட்டதை, அதே போல் உறுதியுடன் முயற்சி செய்வதுதான் திறமையுடைய ஆரம்ப நிலை தொழில்முனைவோர்க்கு வேண்டிய பலன் தரும் என்கிறார். அதனால் நன்கு யோசனை செய்து, எப்படி வெற்றி பெற வேண்டும் என்று திட்டமிட்டு முயன்று செயல்படுங்கள்!



## விழாமலரின் அட்டையை அலங்கரிக்கும் வண்ண ஓவியத்தைத் தந்த குழந்தை

Pranitha Rajaa
Grade 7, Age 13,
Dublin, CA.

# TAXCHAMPION INC.

**Take The Head Ache Out Of Taxes**

- Individual and Corporate Taxes
- S & C, Corporation Tax Return
- 1031 Exchange Tax Filing
- LLC & Partnership Tax Return
- Set-up Non-Profit Organizations
- IRS Audit Representation
- Electronic Filing
- Set-up S & C, Corporation & LLC

- ***Serving Bay Area for over 15 years***
- ***Locations in Union City and Milpitas***



**Lalitha Manohari**
MBA Finance
Tax Preparer / Sr. Loan Officer
NMLS #333611

**info@taxchampion.com | www.taxchampion.com**

# REALTY CHAMPION INC.


## *One Stop Shop For All Your Real Estate Needs*

## BUYING ◆ SELLING ◆ INVESTMENT

Zillow 5-STAR PREMIER AGENT

For more Reviews
**www.zillow.com/profile/higowtham/#reviews**

**www.realtychampion.com**
**gowtham@realtychampion.com**



**Gowthaman Gurusamy**
Realtor /
LIC #01905323
**925.594.2990**

2016 Bay-East Association of Realtors **'PINNACLE AWARD WINNER'**

**CALL GOWTHAM TO GET 50% COMMISSION CREDIT BACK WHEN YOU BUY A BUILDER HOME**

# CHAMPION HOMELOANS

**One Stop Shop For All Your Home Loan Needs**

- *Premium Customer Service.*
- *Smooth and Hassle-Free Loan Process.*
- *100% success rate in closing Loans for our pre-approved Clients.*
- *Best Rates for the best loan program that fits your needs.*

**Lalitha@championhomeloans.com | www.championhomeloans.com**

**Call: 510.441.2583 ◆ 408.262.6267**

Corporate Office: 372 Fairview Way, Milpitas, CA-95035
Branch Office: 4 Union Square, Union City, CA-94587

# அறிவுமதியின் பார்வையில் வள்ளுவம்



கவிஞர் அறிவுமதி அவர்களின் பெயரைக் கேள்விப்பட்டதும் சட்டென்று நினைவுக்கு வருபவை

சினிமாக் கனவுகளோடு வரும் பல இளைஞர்களுக்கு இவர் வீடுதான் வேடந்தாங்கல். இவர் அரவணைப்பில் வாழ்ந்து இன்று சினிமாவில் கோலோச்சுபவர்கள் பலர்

அடுத்தாக நினைவுக்கு வருவது இவர் ஆனந்த விகடனில் எழுதிய சங்கப்பாடல்களைப் பற்றிய தொடர்

முத்தமிழே முத்தமிழே முத்தச் சந்தம் ஒன்று கேட்டதென்ன......

இந்தப் பல்லவியைக் கேட்டவுடன் உளமாரப் பாராட்டினாராம் இசைஞானி.

இவர் இயற்பெயர் மதியழகன், உயிர் நண்பனின் பெயர் அறிவழகன். நட்பைச் சிறப்பு செய்யும் பொருட்டு, தன் பெயரோடு நண்பனின் பெயரையும் சேர்த்து அறிவுமதி ஆனார்.

இவர் போன்ற நல்ல உள்ளம் படைத்தவர்கள் இந்த ஞாலத்தை அழகாக்குகிறார்கள்.

வள்ளுவம் பற்றிய இவரது சில ஹைக்கூக் கவிதைகளுள் சிலவற்றைக் காண்போம்.

தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால்

முக்கடல்
இரு துளி
திருக்குறள்

நூற்று முப்பத்து மூன்று x பத்து
பெருக்கப் பெருக்கப்
பெருகும் வாழ்வு

தமிழின்
நீண்ட பயணம்
இரட்டையடிப் பாதை

தமிழ்ப்பால்
சுண்டக் காய்ச்ச
கிடைத்தது ஏடு

இரண்டு அடி கொடுத்தால்தானே
திருந்துவாய்
வாங்கிக்கொள் வள்ளுவனிடம்

உரை ஊற்றி ஊற்றிப்
பார்த்தும்
புளிக்காத பால்

இரண்டிரண்டாய் அலைகள்
குறளோசை
வள்ளுவத்தில் பார் கடல்

வாழ்க்கை கடல்
கலங்கரை விளக்கம்
வள்ளுவர் சிலை

ஊன்றுகோல் வள்ளுவன்
எழுந்து நிற்கும்
விழுந்த இலெமுரியா


MILLETS
shastha foods
BARNYARD MILLET
FOXTAIL MILLET
KODO MILLET
LITTLE MILLET
PEARL MILLET
SORGHUM MILLET
We Support the Farmers
Distributed by: Shastha Foods Inc. CA, USA.
2205 Ringwood Avenue San Jose, CA 95131. 408 501 7801 Shasthafoods@gmail.com www.shasthaonline.com

# பொருள்பட வாழ்தல்!

- குமரகுருபரன்



வைரத்தை வைரத்தைக் கொண்டுதான் அறுக்க முடியும், அது போல் திருக்குறளை திருக்குறள் கொண்டுதான் விளங்கிக் கொள்ளமுடியும் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள்

இக்கட்டுரையில், பொருள் ஈட்டுவதைப் பற்றி வள்ளுவர் என்ன சொல்கிறார் என்பதைச் சில குறள்களைக் கோர்த்து புரிந்து கொள்ள முயல்வோம்

பொருளை ஏன் ஈட்ட வேண்டும்?
வள்ளுவரிடம் கேட்போமா?

“செய்க பொருளை செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்” என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

அதாவது, பகைவரை அழித்தொழிக்கும் வாள் கூட பொருளை விடக் கூர்மையானது இல்லை எனவே செய்க பொருளை என்கிறார் ஐயன்.

அப்படியென்றால் பொருள் ஈட்டவேண்டும், அது மட்டும் போதும் அதைச் செய்தாலே ஞாலத்தின் மதிப்பு மிக்கவராய் ஆகிவிடலாம் சரிதானே?

ஆம்! சரிதான் ஏனென்றால்

“பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்”

அப்படியென்றால், ஒரு பொருட்டாக மதிக்கத் தகுதி இல்லாதவரைக் கூட மதிப்பு மிக்கவராய் மதிக்கச் செய்வதில் பொருளை விட சிறந்த பொருளில்லை.

அது சரி. ஏதாவது ஒரு வழியில் பொருளை ஈட்ட வேண்டும், அதுவே நம்மை ஒரு பொருட்டாக மதிக்க வைக்கும்.

ஏதாவதொரு வழியில் பொருள் ஈட்டுவது என்பது சரியா?

இல்லை, பொருள் ஈட்டினாலே போதும் என்ற எண்ணத்தில் அறமற்ற முறையிலோ பிறரை வருந்த வைத்தோ பொருள் ஈட்டக்கூடாது

ஏனென்றால்,

“சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று”

அறமற்ற வழிகளில் பொருள் ஈட்டுவது, வேக வைக்காத பச்சை மண்பாண்டத்தில் நீரை ஊற்றி வைப்பது போல். அந்த நீர் அப்பாண்டத்தில் தங்காது வெளியேறி விடும், அதுபோல்தான் அறமற்ற வழியில் வந்த பணமும்.

“அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை”

பிறரை அழ வைத்துச் சேர்த்த பொருள், நம்மை அழவைத்துவிட்டுப் போய்விடும். ஆனால் அறவழியில் ஈட்டிய பொருளை இழக்க நேரிட்டாலும் பின்னாளில் நன்மை பயக்கும்.

ஆக, அறமற்ற வழியிலோ பிறரை அழவைத்தோ பொருள் செய்யக்கூடாது

அப்படி என்றால் எப்படி பொருள் ஈட்ட வேண்டும்?

“ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு
எண்பொருள் ஏனை இரண்டும் ஒருங்கு”

ஒண்பொருள், அதாவது அறவழியில் வரும் பொருளை; காழ்ப்ப இயற்றியார்க்கு - மிகுதியாக இயற்றியவர்க்கு, ஏனைய இரண்டும், அறமும் இன்பமும் ஆகிய மற்ற இரண்டும் சிறந்த செல்வமாக வந்து சேரும்.



அறவழியில் பொருள் மிகுதியாகச் சேர்த்தால் பொருள்தானே வரும்? எப்படி அறமும் இன்பமும் வரும்?

நம்முள் உள்ள அன்பு, அருள் என்ற குழந்தையை ஈனுகிறது

அருள் இருந்தால் பிறருக்கு உதவ வேண்டும், அறச்செயல்கள் செய்ய வேண்டும் என

விருப்பம் தோன்றும். அன்பினை, பெற்ற தாயாகக் கொண்ட அருளானது, அறச்செயல் புரிய தூண்டுதலை மட்டும் தான் தரும். அறச் செயலைச் செய்வதற்கு வேண்டிய செல்வத்தை எது கொடுக்கும்?

பொருளென்னும் வளர்ப்புத் தாய்தான் அந்த செல்வத்தைக் கொடுக்கும்.

"அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும் செல்வச் செவிலியால் உண்டு"

அருள் எனும் குழந்தை தோன்றுவதற்கு காரணமான அன்பு, நற்றாய், அதாவது பெற்ற தாய். அருள்தனை செயல்பட வைப்பது பொருள் என்னும் செவிலித்தாய், அதாவது வளர்ப்புத் தாய். பிறருக்கு உளமாற அறவழியில் உதவுதால் அறமும் இன்பமும் ஒருங்கே எளிதாக வந்து சேரும்.

எதிரிகளை வீழ்த்தும் வாளை விடக் கூர்மையான செல்வத்தை ஈட்டுவோம். ஆம் ஒரு பொருட்டாக மதிக்கத் தகுதி இல்லாதவரையும் மதிப்புக்குரியவராக மாற்றவல்லது செல்வம் மட்டுமே. ஆனால் அறமற்ற வழியிலோ அல்ல பிறரை அழ வைக்கும் வழியிலோ பொருள் செய்தால், அது தங்காது. எனவே அற வழியில் பொருளை மிகுதியாக ஈட்டி, அன்பு தரும் அருளின் துணையால் ஈட்டிய பொருளை பிறருக்கும் பயன் படச் செய்து அறம், பொருள் இன்பம் ஆகிய மூன்றையும் நிறைவாகப் பெற்றுப் பொருள்பட வாழ்வோம்.

------

திரு. குமரகுருபரன் அவர்கள், 1992 ஆம் ஆண்டில், இயந்திரவியல் துறையில் இளங்கலைப் பட்டப்படிப்பினை, சாலை மற்றும் போக்குவரத்துப் பொறியியல் கல்லூரியில் பயின்று, அண்ணாமலைப்பல்கலையில் 1994 ஆம் வெப்ப ஆற்றல் பொறியியலில் முதுகலைப்பட்டம் பெற்றார்.

அதனைத் தொடர்ந்து சென்னையில் பொறியியல் கல்லூரிகளில் ஆறு ஆண்டுகள் பணி. ஆசிரியர் பணிக்கு அவசியம் என்பதனால், மின்னணுக் கருவிகள் வெளியிடும் வெப்பம் நீக்குவது பற்றிய ஆராய்ச்சியில் முனைவர் பட்டமும் பெற்றார்.

கடந்த பதினெட்டு ஆண்டுகளாக மதுரை தியாகராசர் பொறியியற் கல்லூரியில் பணி. தற்போது இணைப்பேராசிரியராக உள்ளார்.


PACIFIC GREEN FUNDING

**PACIFIC GREEN FUNDING**

*Your Mortgage Solution Partner*

- Contact us for your home mortgage, purchase or refinance, needs.
- Join our monthly online Home Buyer Seminar to learn more about the home buying process.
- Licensed in CA. Texas license pending.



**Ravi Selvaraj**
NMLS ID 236549
Pacific Green Funding
ravi@PacificGreenFundig.com
(844) 545-6267

# வள்ளுவன் தந்த தங்கவிதி

- முனைவர் சொக்கலிங்கம் கருப்பையா



## வேலனும் கந்தனும்:

கந்தன் : அட.. வாடா வேலா எப்படி இருக்க?

வேலன் : நான் நல்லா இருக்கேன்டா.. நீ எப்படி இருக்க கந்தா?

கந்தன் : நானும் நல்லா இருக்கேன்.. இப்ப தான் பொன்மொழிகள் சிலத படிச்சிக்கிட்டு இருந்தேன்..அதுல என்ன கவர்ந்த ஒண்ணு மேற்குலகத்துல The Golden Rule ன்னு சொல்லுற தங்க விதி..

வேலன் : ஆமாம், நானும் அத கேள்விப்பட்டிருக்கேன்.. அதனுடைய சாராம்சம் "ஒனக்கு மத்தவுங்க என்ன பண்ணனும்னு நினைக்கிறியோ, அத நீ அவங்களுக்கு பண்ணனும்".. அதானே..

கந்தன் : அதே தான்..நாம ஒவ்வொருவரும் நல்லது நமக்கு நடக்கனும்னு நினைக்கிறோம். அதே நல்லத நாம மத்தவங்களுக்கு செய்தோம்னா நமக்கும் அது போல நடக்கும் தானே..

வேலன் : உண்மை கந்தா...ஆனா நாம எத்தன பேரு நல்லத பாக்குறோம்?

கந்தன் : என்னடா சொல்ற வேலா?

வேலன் : சரி உதாரணத்துக்கு, சாப்பிடறதுக்கு ஒரு கடைக்கு போறோம்னு வச்சுக்க, அங்க சாப்பாடு நல்ல இருந்துச்சு. இன்னொரு நாளு வேற கடைக்கு போறோம். அங்க சாப்பாடு நல்லா இல்ல.. இந்த இரண்டு நிகழ்வுகள்ள, மத்தவங்களுக்கு நாம எத சொல்லுவம்னு ஆராய்ஞ்சு பார்த்தா, நல்ல விடயத்த 25% விழுக்காடும் நல்லா இல்லாதத 75% விழுக்காடும் பேசுவோம்..

கந்தன் : ம்ம்..நீ சொல்றதும் சரியாதான் படுது..நம்ம பாக்குற தொலைக்காட்சி செய்திகள்ள கூட நேர்மறை விடயங்கள விட எதிர்மறை விடயங்களைத் தான் நெறய சொல்லுறாங்க.. அதற்கான காரணமும் இது தான் போல.. அப்ப தங்க விதி ஒத்து வராதுன்னு சொல்லுறியா? அப்ப எப்படி சமூக நலனை நாம முன்னேத்துறது?

வேலன் : அங்க தான் நம்ம தாத்தா வள்ளுவரு வராரு..எதிர்மறையா பாக்குறத இயற்கைன்னு ஒத்துக்குட்டு அதே உத்திய பயன் படுத்தி நல்லது நடக்க ஒரு வழியச் சொல்லுறாரு..

கந்தன் : அப்படியா வேலா, ஆச்சரியமா இருக்கே! என்ன சொன்னாரு?

வேலன் : சரிப்பா நீ குத்தத்த தான் பாக்கபோற.. அதுலயும் மத்தவங்க குத்தம்னா உனக்கு உடனே கண்ணுல பட்டுரும்..அது மாதிரி, அதே பார்வைய ஒன்னோட குத்தத்து மேல செலுத்து..இது போல ஒவ்வொருவரும் செஞ்சோம்னா சமுகத்துல நல்லது தன்னால நடக்கும் டா கந்தா.

கந்தன் : அருமை டா வேலா.. வேலனோட பேசினா வேற லெவலுக்கு போய்டலாம்னு இதுக்குதான் சொல்றாங்களோ..:-) சரி..அந்தக் குறளையும் சொல்லிடுறா

வேலன் : டேய்..என்ன கிண்டல் பண்ணது போதும். இது தான் டா அந்தக் குறள்:





INDIAN RESTAURANT
HALAL I-TASTE
DOSA & CURRY
RESTAURANT
DOSA & CURRY
Vegetarian Restaurant
VEGETARIAN
CATERING:
Onsite Dosa
Corporate Catering
All Events
Birthday party
Get-together
House-warming ceremony
39742, Cedar Blvd,
Newark, CA 94560
(510) 573-4056
dosaandcurry@gmail.com
Vegetarian Restaurant
www.dosaandcurry.com

# வள்ளுவம் தீட்டிய விரல்கள்







Balaji Saravana Gupta
Grade 5, Age 10
San Ramon, CA






Nanditha Balamurugan
Grade 8, Age 13
Fremont, CA







Preethika Prabhakaran
Grade 3, Age 9
Fremont , CA

# குறள் சொல்லும் குரலோடு
# வள்ளுவம் தீட்டிய விரல்கள்










Nitish Omprakash
Grade 7, Age 13
San Jose, CA



Mruthula Mohankumar
Grade 7, Age 13
Pleasanton, CA






Meha Rajaa
Grade KLG, Age 5,
Dublin, CA

## குறள் சொல்லும் குரலோடு
# வள்ளுவம் தீட்டிய விரல்கள்






Mahathi Kamalanathan
Grade 3, Age 9,
Livermore, CA





Lekha Anand
Grade 6, Age 11,
Sunnyvale, CA






Pranitha Rajaa
Grade 7, Age 13,
Dublin, CA

# குறள் சொல்லும் குரலோடு
# வள்ளுவம் தீட்டிய விரல்கள்










Kamalesh Aravind Kumar
Grade 2, Age 7
Fremont, CA






Koushik Sai Omprakash
Grade 2, Age 8,
Sanjose, CA





Mahathi Mohankumar
Grade 2, Age 8,
Pleasanton CA

# குறள் சொல்லும் குரலோடு
# வள்ளுவம் தீட்டிய விரல்கள்





Kaaviya Saravanamoorthi
Grade 3, Age 9,
Fremont, CA





Janani Jaganathan
Grade KG, Age 5
Fremont, CA






Ashrithaa Mahendran
Grade KG, Age 5
Sunnyvale, CA






Akshata Satheesh Kumar
Grade 1, Age 6,
Dublin, CA

# குறள் சொல்லும் குரலோடு
# வள்ளுவம் தீட்டிய விரல்கள்






Achyut Badhrinath
Grade 5, Age 11
San Jose, CA





Akkash Hari
Grade 3, Age 8
Dublin, CA






Shreya Karthik
Grade KG, Age 5
San Jose, CA



# திருக்குறளில் தானமும் தவமும்

- தேவி நாகப்பன்

“தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காது எனின்”



என்கிறது திருவள்ளுவரின் பொய்யாமொழி. இல்லாதவர்க்கு வழங்கும் கொடை மனித சமுதாயத்தின் நடைமுறையே.

ஆனால் தவம் என்பது, “ஒன்றையே நினைப்பது, அதிலேயே ஆழ்ந்து விடுவது. ஆந்த ஆன்மீகத்தின் ஆழத்திலே மன அமைதி கொள்வது! தவத்தினால், ஐம்புலன்களும் கட்டுப்படுகின்றன! தம்மையே ஒருவர் வருத்திக் கொள்வதால் உள்ளம் பண்படுகிறது!”

தவம் புரிவோர் யாரையும், எவற்றையும் துன்புறுத்துவதில்லை. அவரது கருணைப்பார்வை, அனைத்து உயிர்களின்மீதும் சமமாகப் படர்ந்துவிடுகிறது. அதனால் தான் தானமும்-தவமும் சிறக்க வேண்டும் என்று வள்ளுவர் விரும்புகிறார்.

இருப்பவர்களுக்கு தானம்கொடுக்க அவர்களின் மனம் ஒப்புவதில்லை. அமைதி தேடி அலைபவர்களோ தவம் செய்ய விரும்புவதில்லை. இவற்றையெல்லாம் வயதான காலத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று இளைஞர்கள் கருதுகிறார்கள். முதியவர்களோ சம்சார சாகரத்தில் மூழ்கிப் போகிறார்கள்.

“அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றுஅது
பொன்றும்கால் பொன்றாத் துணை” (கு.எ: 36)

உயிரானது பிரியுங்காலத்தில், பதவியோ அதிகாரமோ அந்தஸ்தோ எதுவும் துணைக்கு வரப்போவதில்லை. ஒருவன் செய்த புண்ணியம் மட்டுமே கூட வரும். ஆகவே, இன்றே அறம் செய்க என்று அறிவுறுத்துகிறார் திருவள்ளுவர்.



இ ப் பி ற வி யி ல் தவம் செய்வதற்கு முற்பிறவியிலேயே தவமியற்றியிருக்க வே ண் டு ம் என்கிறார்.

“தவமும் தவமுடையார்க்கு ஆகும் அதனை
அஃதிலார் மேற்கொள் வது” என்கிறார்.



தவமானது பற்று நீங்கிய வழிபாடு. அதை ‘நிஷ்காமிய பக்தி’ என்கிறது சாஸ்திரம். ‘காமிய பக்தி’ என்பது ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான முயற்சியாகும்.

தவத்தை வழிபாடாக மட்டும் கருதவில்லை வள்ளுவர். அதை ஒரு கடமை என்று கூறுகிறார்

“தவஞ்செய்வார் தம்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு”. (கு. எ: 266)

தர்மம் தலை காக்கும் தவம் உயிர் காக்கும். இங்கு தலை என்பது தலைமுறைகளைக்குறிக்கிறது. நாம் செய்கிற தானம் நம்மையும் நம் தலைமுறையையும் காக்கும். அதனால் தான் நம் முன்னோர்கள் தானத்தையும் தவத்தையும் வாழ்க்கையின் லட்சியங்களாகக் கொண்டிருந்தனர்.

“ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்”. (கு.எ.264)

என்றும் கூறுகிறார்.

தவமிருந்தால் ஞானம் பெறலாம், அந்த ஞானம் நம் அஞ்ஞானத்தை அகற்றிவிடும்.

“சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு” (கு.எ.267)

சுடச்சுட பொன் ஒளிர்வதைப் போலத் துன்பங்கள் வருத்த, வருத்த தவம் செய்பவர்க்கு ஞானம் பெருகும் என்பது பொருள்.

தவம் அதர்மத்தை அகற்றி தர்மத்தை போற்றுபவரைக் காக்கிறது. தவத்திற்கு அத்துணை ஆற்றல் இருக்கிறது.

தானம்-தவம் என்னும் இரண்டின் அருமை பெருமைகளை தமது குறட்பாக்களிலே வரிசைப் படுத்தியிருக்கும் வள்ளுவர் வழிதனிலே நாமும் தவம் புரிந்து, தானம் செய்து வாழ்வில் வளம் பல பெறுவோம்.

# ARUSUVAI INDIAN RESTAURANT

FRESH INGREDIENTS. FRESH FOOD



## GRAND CHETTINAD LUNCH BUFFET

**on Fri, Sat, Sun.**

*11.30 AM to 3.00 PM*

2636 HOMESTEAD RD, SANTA CLARA, CA 95051
PHONE: 408-246-8292
WWW.ARUSUVAICA.COM

# அறமே அழியாத் துணை

- இளங்கோ



இந்தியத் திருநாட்டில் உள்ள 'ஒடிஷா' என்ற மாநிலத்தில் 'கட்டக்' என்று ஒரு பழமைவாய்ந்த மாநகரம் உண்டு. இந்த நகரத்தில் 'பாகஷி பஜார்' என்ற புகழ் வாய்ந்த சந்தை இருக்கிறது. பல கடைகள் உள்ள இந்த சந்தையில் ஒரு முதியவரின் டீ கடை மிகவும் பிரபலமானது.

இந்த முதியவர் ஐம்பது ஆண்டுகளாக டீ விற்றுக் கொண்டிருக்கிறார். டீ கடையில் இருந்து வரும் வருமானத்தில் எண்பது மாணவர்களுக்கு இலவசமாக கல்வி கற்றுக் கொடுத்து வந்துள்ளார். தினமும் காலை நாலு மணிக்கு எழுவார். பத்து மணி வரைக்கும் கடையை நடத்துவார். அதன் பிறகு அவர், பெரிய வருமானம் இல்லாத நிலையிலும், ஏழை குழந்தைகளுக்காக ஒரு பள்ளியை நடத்திக் கொண்டுவருகிறார்.

சிறு வயதிலிருந்தே அவருக்கு எழுதவும் படிக்கவும் பிடிக்கும். அவர் தந்தை நடத்திய டீ கடையில் அவ்வப்போது அவர் தந்தைக்காக சிறு உதவிகளை செய்துக்கொண்டே இருந்தார். நாளடைவில் அவர் தந்தைக்கு டீ கடையில் அதிக உதவி தேவைப்பட்டதால், பத்தாம் வகுப்போடு தன் படிப்பை முடித்துக்கொண்டார். அவர் தந்தைக்கு உடல் நலம் குன்றிய பிறகு, டீ கடையை முழுவதுமாக நடத்த வேண்டிய கடமைக்கு உள்ளானார். அவருடைய கல்விக் கனவுகள் எல்லாம் கலைந்தன.

டீ கடை நடத்தும் வேளைகளில், அவரைச் சுற்றிப் பல ஏழைக் குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்லாமல் விளையாடிக் கொண்டிருப்பதை கவனித்து, அந்த குழந்தைகளுக்கு கல்வி கற்கும் வாய்ப்பு இல்லையே என்று வருத்தப்பட்டார். அவர்களுக்காக, 'ஆஷா ஒ அஷ்வசனா' என்று ஒரு சிறு பள்ளியை ஆரம்பித்தார். அத்தோடு நிற்காமல், அந்த ஏழைக் குழந்தைகளின் பெற்றோர்களை சந்தித்து, கல்வியின் முக்கியத்துவத்தை விளக்கி, அவர்கள் சம்மதத்தைப் பெற்று, அந்தப் பிள்ளைகளைப் பள்ளிக்கு வரும்படி அழைத்தார்.

அந்தப் பள்ளியில் மூன்றாம் வகுப்புவரை ஏழைப் பிள்ளைகள் படிக்கலாம். அதற்கு பிறகு, அவரே அந்த ஊரில் இருக்கும் அரசுப் பள்ளியில் அந்தக் குழந்தைகளைச் சேர்த்து விடுவார்.

பள்ளிக்கூடம் நடத்துவதோடு, கடந்த நாற்பது ஆண்டுகளாக, இந்த மாமனிதர், இரத்ததானமும் செய்துக்கொண்டு வருகிறார். அவர் இந்திய நாட்டின் நான்காவது மிகப்பெரிய விருதான 'பத்ம ஸ்ரீ' விருதை இந்த ஆண்டு பெற்றுள்ளார். அவர் பெயர் 'தேவரப்பள்ளி பிரகாஷ்ராவ்.'

'அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை'


பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்யவேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத் துணையாகும்.

நல்ல வேலை கிடைத்தப்பின், நல்ல வருமானம் வந்தப்பின், அடுத்த ஆண்டில், இன்னும் கொஞ்ச நாளில், பிள்ளைகள் வளர்ந்த பின், அவர்கள் கல்லூரி முடித்த பின், வேலையில் ஓய்வுப் பெற்ற பின், கடமைகளை முடித்த பின், என்று தள்ளிப்போடாமல், இன்றே முடிந்த உதவியை நாம் அனைவரும் செய்யலாம். உதவி செய்வதற்கு பணம் முக்கியமில்லை, மனம் தான் தேவை. அறம் செய்வதற்கு நிகழ் காலமே சிறந்த காலம்.









AappaKadai
Indian Chettinad
Vegetarian & Non-Vegetarian
விரிகுடாக் குறள் கூடம் (BAKK) அமைப்பினருக்கும்
திருக்குறள் போட்டி 2019ல் பங்குபெறும் குழந்தைகளுக்கும்
வாழ்த்துகள்
Call us for Catering
408.243.2778 ● 408.732.2244
925.750.7709 ● 925.750.7719
எட்டாவது
வெற்றிகரமான
ஆண்டில்
உங்கள் தொடர்ந்த
ஆதரவுக்கு நன்றி
இந்த பண்டிகைக்
காலத்தில் எங்களோடு
உணவருந்த வாருங்கள்
அன்புடன் அழைக்கிறோம்
Try our best-in-class Full Service Catering
வாங்க சாப்பிடலாம்
Sunnyvale, CA
1105 W El Camino Real
Sunnyvale, CA 94087
Tel: 408.732.2244
Santa Clara, CA
3075 El Camino Real
Santa Clara, CA 95051
Tel: 408.243.2778
Pleasanton, CA
4555 Hopyard Road
Pleasanton, CA 94588
Tel: 925.750.7709
Like us on Facebook
www.AappaKadaiUSA.com

# Trinethra
Super Market

Quality
at Incredible Prices

We Carry Tamilnadu, Srilankan
and Nepali Products

We promise to deliver
an experience you can
look forward to

Juice & Sandwich bar, Home Made Curries and
Fresh Roti to go!
( Sunnyvale Location Only )

**Cupertino**
10255 S De Anza Blvd
Cupertino, CA 95014
Ph: (408) 996-2400
8:00 AM - 9:00 PM

**San Jose**
4436 Pearl Ave
San Jose, CA 95136
Ph: (408) 979-9229
9:00 AM - 9:00 PM









## Sunnyvale

812 W El Camino Real
Sunnyvale CA 94087
Ph: (408) 900-8907
9:00 AM - 10:00 PM

## Santa Clara

3379 El Camino Real
Santa Clara CA 95051
Ph: (408) 423-9483
9:00 AM - 10:00 PM

# Madras Café's

# MADRAS GROCERIES
Indian Super Market





1187, W.El Camino Real
Sunnyvale, California
**TEL: 408.746.0808**
Open All Days
Mon - Sun: 9 AM - 10 PM



Pay with your Smartphone, when you shop with us

Apple Pay | Android Pay | SAMSUNG pay | SoftPay

**Check store for**
**Anniversary SALE!**

- Wide Range of food Products
- Garden Fresh Vegetables
- Organic Vegetables & Products
- Courteous Customer Care
- Ample Parking Space
- Clean Environment



**Authentic**
**South Indian Thali,**
**Fresh Roti Naan,**
**Chaat, Fresh Juice**
**and more...**

# Madras
## Food Court

For To-Go Orders,
**Call - 408.245.2323**

Ph: 408.737.2323

# Madras Café
South Indian Veg. Restaurant


Breakfast at 8.30am

**Business Hours:**
Tue - Fri : 8:30a.m - 2:30p.m & 5:30p.m - 10:00p.m.
Sat-Sun: 8.30a.m - 10.00p.m. Monday Holiday

1177, W.El Camino Real, Sunnyvale, CA 94087
www.madrascafe.us

At the Intersection of El Camino & Bernardo

Oh,it's So Delicious!



"tastier than ever"
Stop by once
You Can't Stop you

# திருக்குறள் விழா - 2018

- கௌரி சேஷாத்ரி



விரிகுடாக் குறள் கூடம் வெற்றிகரமாக தனது 5வது வருட திருக்குறள் போட்டியை மார்ச் 10, 2018 சனிக்கிழமை அன்று ஃபிரிமாண்ட்-ல் உள்ள ஹார்னர் ஜூனியர் உயர் நிலைப் பள்ளியில் துவக்கியது. தன்னார்வத் தொண்டர்களின் உதவியோடு திருக்குறள் போட்டி காலை 8 மணி முதல் மதியம் நான்கு மணி வரை நடைபெற்றது.

ஐந்து பிரிவுகளில் நடைபெற்ற இந்தப் போட்டியில் மொத்தம் 238 குழந்தைகளும் 5 பெரியவர்களும் கலந்து கொண்டு 10,845 குறள்களை அதன் பொருளோடு சொல்லி பரிசுத் தொகையை பெற்றுச் சென்றார்கள். பெரியவர்கள் பிரிவில் மட்டும் 5 பேர் கலந்து கொண்டு 1497 குறள்களைச் சொன்னார்கள்.

விரிகுடாக் குறள் கூடம் சிறுகுழந்தைகளை உற்சாகப் படுத்தும் வகையில் ஒலிப்பெருக்கியை ஏற்பாடு செய்து மழலைக் குரலில் திருக்குறளைக் கேட்கச் செய்தது பார்ப்பவர்கள் அனைவரையும் மகிழ்வித்தது.

ஐந்து வயதிற்கு கீழ் உள்ளவர்கள் பிரிவில் மொத்தம் 51 குழந்தைகள் பங்கு பெற்றார்கள். முதல் பரிசை ப்ரணவ் கார்த்திகேயன் மற்றும் ஷ்ரேயா கார்த்திக்கும் பெற்றனர். இரண்டாம் பரிசை வைபவ் கண்ணன், மூன்றாம் பரிசை ராகினி சுதாகர் மற்றும் விபா பாலாஜியும் பெற்றார்கள்.



**ப்ரணவ் கார்த்திகேயன்**



**ஷ்ரேயா கார்த்திக்**



**ராகினி சுதாகர்**



6 முதல் 9 வயது வரை உள்ள பிரிவில் மொத்தம் 127 குழந்தைகள் பங்கு பெற்றார்கள். முகிலன் பிரவீன் குமார் முதல் பரிசையும், அனுஸ்ரீ நவநீத கிருஷ்ணன் இரண்டாம் பரிசையும், ரக்ஷிதா சுதாகர் மூன்றாம் பரிசையும் பெற்றார்கள்.



**விபா பாலாஜி**



**முகிலன் பிரவீன் குமார்**



**அனுஸ்ரீ நவநீத கிருஷ்ணன்**



**ரக்ஷிதா சுதாகர்**

10முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகள் பிரிவில் மொத்தம் 52 குழந்தைகள் பங்குபெற்றார்கள். மகேஷ் நிரஞ்சன் கார்த்திகேயன் முதல் பரிசையும், ஹரிணி நாகப்பன் இரண்டாம் பரிசையும், ரிஷி சந்திரசேகர் மூன்றாம் பரிசையும் பெற்றனர்.



**மகேஷ் நிரஞ்சன் கார்த்திகேயன்**



**ஹரிணி நாகப்பன்**



**ரிஷி சந்திரசேகர்**

13-15 வயது குழந்தைகள் பிரிவில் மொத்தம் 8 குழந்தைகள் பங்கு பெற்றார்கள். இளவர்த்தினி திரு நாராயணன் முதல் பரிசையும், தீபிகா செந்தில் இரண்டாம் பரிசையும், கீர்த்தி ராஜ் மூன்றாம் பரிசையும் வென்றனர்.





**இளவர்த்தினி திரு நாராயணன்** **தீபிகா செந்தில்** **கீர்த்தி ராஜ்**

குழந்தைகளோடு சேர்ந்து பெரியவர்களும் திருக்குறள் போட்டியில் பங்கேற்க ஆசைப்பட்டதால் விரிகுடாக் குறள் கூடம் தமிழில் ஆர்வம் உள்ள பெரியவர்களை ஊக்கப்படுத்த அவர்களுக்கும் தனிப்பிரிவை ஏற்பாடு செய்தது. பெரியவர்கள் பிரிவில் திருமதி.சுகன்யா கல்யாணசுந்தரம் 1330 குறள்களை அருவி போல் பொழிந்து குறளரசி பட்டத்தையும் முதல் பரிசையும் பெற்றார். திருமதி. சேதுக்கரசி சம்பந்தம் இரண்டாம் பரிசையும் திருமதி. சரஸ்வதி செல்வம் மூன்றாம் பரிசையும் பெற்றார்கள்.



**சுகன்யா கல்யாணசுந்தரம்**

**சேதுக்கரசி சம்பந்தம்**



கடந்த நான்கு வருடமாக பெரியவர்களும் திருக்குறள் போட்டியில் உற்சாகமாகப் பங்கேற்கின்றனர். இந்த வருடம் இரண்டாவது குறளரசியை விரிகுடாப் பகுதிக்கு அறிமுகப்படுத்தியதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறது விரிக்குடாக் குறள் கூடம்.

திருக்குறள் போட்டியின் 2018 ஆம் ஆண்டு பரிசு வழங்கும் விழா சனிக்கிழமை மார்ச் மாதம் 24 ஆம் நாள் டப்ளின் உயர்நிலைப்பள்ளியில் வெகு விமரிசையாக நடைபெற்றது. செல்வன். சித்தார்த் நஞ்சன்குட் கடவுள் வாழ்த்துப் பாட விழா மாலை ஐந்து மணிக்குத் துவங்கியது. பெர்கலி கல்லூரிப் பேராசிரியர் முனைவர் பாரதி சங்கர ராஜுலு அவர்களும் மற்றும் குறளரசி ஈஸ்வரி பாண்டியனும் சிறப்பு விருந்தினராக வந்து விழாவினை சிறப்பித்தனர். திருமதி. சியாமளா ரகுராம் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். திருமதி. காவேரி கணேஷ் வரவேற்புரை வழங்கினார்.திரு. தில்லி துரை, திருமதி. நித்யவதி சுந்தரேஷ், திரு. இளங்கோ மெய்யப்பன், திரு. உதய பாஸ்கர் அனைவரும் திருக்குறளின் பெருமையைப் பற்றிப் பேசினார்கள். இதைத் தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திரு.பிரதீப் குழுவினர் திருக்குறளை இசை வடிவில் மிக அழகாக பாடினார்கள். மற்றும் திரு. ராஜா மணி, திருமதி. ஸ்ருதி ஆகியோரும் பாடல்களை பாடினார்கள்.

அடுத்து தன்னார்வத் தொண்டர்களை மேடைக்கு அழைத்து விரிகுடாக் குறள் கூடம் கௌரவப்படுத்தியது. சிறப்பு பேச்சாளர்களாக வளைகுடாப் பகுதித் தமிழ் மன்றத்தின் தலைவர் திரு. தயா, பாரதி தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் திரு.முரளி ஜம்பு கலந்துகொண்டு, உரையாற்றி, விழா மலரையும் வெளியிட்டனர்.

திருக்குறள் போட்டியில் பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் பரிசுகள் கொடுக்கப்பட்டன. தங்கள் குழந்தைகளை மேடையில் பரிசுடன் பார்த்த பெற்றோர்கள் கண்களில் பெருமையும் மகிழ்ச்சியும் பொங்கியது. விரிகுடாக் குறள் கூடம் 1330 குறள்களையும் ஒப்பித்த திருமதி. சுகன்யா கல்யாணிசுந்தரம் அவர்களுக்கு “குறளரசி” பட்டத்தை முனைவர் பாரதி அவர்கள் வழங்கினார்கள்.

விழா மலரின் அட்டைப்படத்திற்கு ஓவியப் போட்டி நடத்தியதில் விரிகுடாப் பகுதியை சேர்ந்த பல குழந்தைகள் பங்கேற்றனர். அனைத்து குழந்தைகளின் ஓவியங்கள் விழா மலரை அலங்கரித்தன. இதில் விக்ரம்வேல் அனந்தகுமாரின் சிறப்பான ஓவியம் முதல் பரிசைப் பெற்றது. மேலும் இஷிதா பன்சாய், இளவர்த்தினி திரு நாராயணின் ஓவியங்கள் ஆறுதல் பரிசை பெற்றது. இவர்களின் ஓவியங்கள் விழாமலரின் முகப்பு அட்டையை அலங்கரித்தன.

குறள் சொல்லி மழலைக்குரலால் வசப்படுத்திய அனைத்துக் குழந்தைகளுக்கும் விரிகுடாக் குறள் கூடம் பரிசுத் தொகையும், வாழ்த்துச் சான்றிதழையும் கொடுத்து கௌரவித்தது. திருமதி. கௌரி சேஷாத்திரி நன்றி உரை கூற விழா இனிதே முடிந்தது.

இது போன்று குழந்தைகளின் திருக்குறள் கற்கும் முயற்சியும், பெற்றோர்களின் ஊக்குவிப்பும், தன்னார்வ தொண்டர்களின் ஒத்துழைப்பும் மற்றும் புரவலர்களின் பங்களிப்பும் இருக்கும் வரை விரிகுடாக் குறள் கூடம் இந்த நிகழ்வை வருடந்தோறும் நடத்தும் என்ற நம்பிக்கை மனதில் பூத்தது.

# Komala Vilas

## serving you for over 18 years





| Breakfast | Lunch | Dinner |
|---|---|---|
| 8:30am till 11:30am | 12:00am till 2:30pm | 5:30pm till 9:30pm |
| Idly, Vadai, Variety of Dosas, Uppuma and many more | Every day different menu, We serve traditional lunches | Dinner is a la carte with Tiffin and variety rice. |


*If the food and service are good let your friends know about them*
*Otherwise bring it to our attention*

**We cater for any function such as: Seemandham, Poonal, Weddings, House Warming, Birthdays, etc.**

பருப்பு தேங்காய் *Freshly made*
தேன்குழல்
South Indian style Laddu
South Indian style Mixture
Sweet Poli, etc.

available at
**Komala Vilas.**

**408.733.7400**



**Hours:**

**Mon, Wed thru Friday:**
8:30am to 2:30pm, 5:30pm to 9:30pm
**Saturday and Sunday**
8:30am to 11:30am (Breakfast)
12:00noon to 2:30pm (Lunch) 5:30pm to 9:30pm (Dinner)

**Unlimited Lunch**
Back on popular demand

# Komala Vilas

*Where taste meets tradition.*

1020 E El Camino Real (El Camino Real & Henderson)
Sunnyvale CA 94087

**Tel: 408.733.7400**

# யானை யானை அழகர் யானை

- சித்ரா



சிறு வயதில் நெல்லையப்பர் கோவிலுக்குப் பயணப்படும் போதெல்லாம் என் உள்ளம் துள்ளும். சின்னாளப்பட்டுப் பாவாடை சரசரக்க, கீழநத்தம் ஊரிலிருந்து பேருந்து ஏறி, நெல்லை டவுன் வந்து இறங்குவோம். காந்திமதியையும் நெல்லையப்பரையும் பார்க்கும் ஆவலில், பாட்டியும் தாத்தாவும் ஸ்லோகங்களை முணுமுணுத்துக் கொண்டே வருவார்கள். எனக்கோ நெல்லையப்பர் கோவிலில் இருக்கும் சங்கரனை பார்ப்பதில் தான் ஆவல். கோவில் நெருங்கும் போதே ஞாபகமாக சங்கரனுக்கு வாழைப்பழம் வாங்கி தரச் சொல்லிக் கேட்பேன். உள்ளே நுழைந்ததும், என் கண் சங்கரனையே தேடும். பாட்டியோ, சன்னிதானம், உள் பிரகாரம், வெளிப் பிரகாரம் என்று சுற்றி என் பொறுமையை சோதிப்பார்கள். கோவில் மண்டபம் அருகே சங்கரன் பளீரென்று நெற்றி நிறைய திருநீறுடன் எங்களை வரவேற்பான். பழத்தை தூக்கிக் கொண்டு தடதடவென்று சங்கரனை நோக்கி ஓடுவேன். பாட்டியோ பதறியபடியே என் பின்னால் வருவார். சங்கரன் சற்று கருப்பு என்றாலும், களையானவன். அகன்ற நெற்றியில் பட்டையாக நீறு சாற்றி அழகு சொட்ட தன் தும்பிக்கையால் அனைவரையும் ஆசிர்வதிப்பான்.



நாங்கள் கொடுக்கும் வாழைப் பழத்தையோ தேங்காயையோ கேட்டு வாங்கி தன் பொக்கை வாய்க்குள் போட்டு கொள்வான். எங்களை சங்கரன் தன் தும்பிக்கையால் ஆசிர்வாதம் செய்து அன்போடு வரவேற்பான். நான் என் பிறவி பயனை அடைந்து விட்டதாகவே நினைத்துக் கொள்வேன். சங்கரனின் பாகனோடும் எனக்குப் பரிச்சயம் உண்டு. அன்பான மனிதர். குழந்தைகள் வந்தால் கூடுதல் கவனத்தோடு சங்கரனை விளையாடச் செய்வார். கோவிலிலிருந்து வீட்டுக்கு வரும் போதெல்லாம் யானையைப் பற்றியே பேசிக் கொண்டு வருவேன். “யானை யானை அழகர்

VRUDHI

PRESENTS

# PUREST COLD PRESSED OIL!

## Groundnut Oil

## Sesame Oil

TRY IT TODAY

### Health Benefits:

- Rich in Vitamin-E, acts as anti-inflammatory & healing agent!
- Promotes beautiful and healthy skin!
- Improves good cholesterol percentage!
- Healthy growing of kids with essential nutrition!



### Contact us:

1103 E El Camino Real,
Sunnyvale, CA 94087
info@northhills.com
(408) 480-5849
http://www.vrudhiproducts.com/

யானை, அழகருக்கு சொக்கரும் ஏறும் யானை, கட்டுக் கரும்பை முறிக்கும் யானை”, என்று வரும் வழியெங்கிலும் பாடிக்கொண்டே வருவேன்.

யானைகளைப் பிடிக்காத குழந்தைகளும் உண்டோ? ஆனால் யானைகளை வெறுக்கின்ற மனிதர்களாக எப்படி மாறினோம்? புதுக்கோட்டை சமஸ்தானத்தின் யானை, தன் பாகன் நோயுற்று இறந்தபோது, உணவு ஏதும் உட்கொள்ளாமல், பித்துப் பிடித்து, செய்வதறியாது தவித்தபோது, திவான், பாகனின் மனைவியை அழைத்து யானைக்கு உணவு கொடுக்க சொன்னார். குட்டி யானையாக தான் வளர்த்த யானையை அந்த பெண்ணும் அன்போடு அணுகி உணவு கொடுக்க, யானையும் கண்ணீரோடு சாப்பிட்டதாக, உ.வே.சா அவர்களின் குறிப்பில் அறியலாம். ஆப்பிரிக்க காட்டு யானைகள் அமைதியாக ஊர்வலமாக வந்து காப்பாளர் லாரன்ஸ் அந்தோணியின் மரணத்தின் போது இறுதி மரியாதை செய்து திரும்பி சென்ற நிகழ்வு அனைவரையும் திகைக்க வைத்தது.

வேழம் எனும் சொல், ஆண் யானையைக் குறிக்கும் ஒரு சொல்லாக இருக்கின்றது. ஆண் யானையை களிறு என்றும் அழைப்பர். அதே வேளையில், பெண் யானையை பிடி என்று அழைப்பர். யானைகள் பிளிரும். யானையின் தந்தங்களைக் கோடு என்றும் கூறுவர். ஆப்பிரிக்க யானைகள் ஆசிய யானைகளை விட உருவத்தில் பெரிதாகவும் பெரிய காதுகளையும் கொண்டிருக்கின்றன.

குறுந்தொகை:

“செங்களம் படக் கொன்று அவுணர் தேய்த்த
செங்கோல் அம்பின் செங்கோட்டு யானை
கழல்தொடி சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக் காந்தட்டே”

முருகனின் போர் யானை ஒன்று உடம்பெங்கும் செங்குருதி பூசி, உலா வந்த காட்சியை குறுந்தொகை நம் கண் முன்னே வைக்கிறது. போரில் பாகன் இறந்திட்டால், அவன் உடல் விட்டு விலகாமல் மடியுமாம் போர் யானை. இப்படி மனிதனை போலவே அன்பு, நேசம், அறம் கொண்டு அமைதியாக வாழும் உயிரினம் யானை. இந்த அமைதியான விலங்கின் வாழ்வியலையும் விட்டு வைக்க வில்லை மானுடத்தின் பேராசை.

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடைய தரண்.

மணிபோல் தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஆகிய இவை நான்கும் உள்ளதே அரண் ஆகும். இன்று மனிதனின் அளவில்லாத பேராசையால் யானை வழித்தடங்கள் யாவும் அழிந்து, காடுகளின் பரப்பளவு சில ஏக்கர்களாக மட்டுமே சுருங்கி, எந்தத் தவறும் செய்யாத யானைகளுக்கு ஊர் எல்லைகள் சிறை வாசமாகி விட்டன. மின் வேலிகளும், ரயில் தண்டவாளங்களும், மரண சாசனம் ஆனது. இந்தியாவில் மட்டும் வருடம் ஒன்றுக்கு 250 யானைகளுக்கு குறையாமல் விபத்தில் மரணிக்கின்றன. இது மிகப் பெரிய துயரம்.

யானைகளைக் கொண்டாடிய தமிழ்ச் சமூகத்தில், சின்னத்தம்பி என்ற ஒரு யானையின் வாழ்வியல் போராட்டத்தை, தனிமை ஓலத்தை வெறும் “சிறப்புச் செய்தி” யாக மட்டுமே பார்க்க தொடங்கி இருக்கிறோம்.

நீரும் களர்நிலமும் நீள்மலையும் சூழ்காடும்
சேரும் சிறப்பே அரண்

என்று வள்ளுவர் சொன்னார். ஆனால் இன்றோ, மண், மலை, காடு, நீர் அனைத்தையும் கொன்று தின்று மனிதம் மட்டும் வாழ்ந்திட எத்தனிப்பது நியாயமா? இவ்வுலகம் நமக்கும் மட்டுமே சொந்தமானதா? பிற ஜீவராசிகளுக்கு இடம் இல்லையா? கூட்டமாக வாழும் யானையை தன் சொந்தங்களிடம் இருந்து பிரித்து, தனியாக தவிக்க வைத்து, ஊரை விட்டு விரட்டி அடித்து என்ன சாதனை செய்கிறோம் நாம்.




யானையால் யானையாத அற்று என்று யானையைக் கொண்டே யானைகளை சித்திரவதை செய்கிறோம். ஒரு சின்னத்தம்பி யானை தன் மொத்த பலத்தையும் திரட்டி போராடி மானுடத்தின் முன் தோற்றே போனது. மானுடம் ஜெயித்ததாக கொள்ள முடியாது. இயற்கையோடு, மானுடம் ஒரு கொலைவெறி தாக்குதல் நடத்திக் கொண்டே இருக்கிறது. இயற்க்கையை அழித்து மானுடம் தழைக்க வழி உண்டோ? யானை வழித்தடங்களை மறித்து சொகுசு விடுதிகளும், வீடுகளும் கட்டுவதை எப்போது நிறுத்த போகிறோம்?

இயற்கை மனிதனின் தேவைக்கு அள்ளிக் கொடுக்கும். ஆனால் இயற்கையால் மனிதனின் ஆசைக்கும், பேராசைக்கும் பால்வார்க்க முடியாது.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை.

என்ற வள்ளுவனின் வார்த்தைக்கு செவி மடுக்காமல் வாழ்வோமேயானால், சின்னத்தம்பியை போல நாமும் நம் வாழ்விற்கு போராடும் நாள் வெகு தொலைவில் இல்லை.



# Sudhir Gupta

Realtor
Bre # 01290621
www.SudhirHomes.com
**Legacy Real Estates and Associates**
41111 Mission Blvd.
Fremont CA 94539
**Cell:** 510-552-4018
**Direct:** 510-744-3510

- In real estate business since 2002
- Sold over 150 homes in Alameda, Contra Costa and Santa Clara counties.
- Bay area resident for over 25 years.
- My goals and commitment to my clients: to provide the excellent service over and above their expectation based upon mutual trust, care, respect, confidence.
- Taking care of my clients interest is my top priority.
- Learned customer service in the very early age from my father and grand father when I helped them in their business.
- Acquired the knowledge of business principles through higher education by passing Chartered Accountant Examination in India and C.P.A examination in U.S.A.
- Gained practical experience in managing the business by working as sales manager for fortune 500 company and working in accounting for small to large private companies.

**GOALS:** Create a positive impact in the community I live in and beyond.

**PHILOSOPHY:** My philosophy in life to find the good in people, situation and circumstances.

**HOBBIES & INTEREST:** The commitment to continue to learn, grow and improve by constantly learning from my experience and by reading the books on personal growth and development, human interaction and leadership.

**TESTIMONY:**

We bought our first home in summer 2015 using the services of Sudhir. He is very thorough, detail oriented and patient. He explained the home buying process and when it was time to look for a home and close it his efforts, knowledge and experience made it a seamless experience for us. He also has a great network of other professionals (mortgage, handy men, movers etc) who helped buying home very easy and simple for us. He was very personable and straight forward, things that you want in a real estate agent. I highly recommend Sudhir and you will be very satisfied with his services.

# குறளரசி சுகன்யாவுடன் ஓர் உரையாடல்

- உரையாடியவர் : காவேரி கணேஷ்



2018ஆம் ஆண்டின் குறளரசிப் பட்டம் பெற்ற சுகன்யா உடன் ஓர் உரையாடல்

**1. வணக்கம். உங்களைப்பற்றி அறிமுகம் செய்து கொள்கிறீர்களா?**

எனது பெயர் சுகன்யா. கணவர் பெயர் சசிபகவத்சிங், மகள் சம்யுக்தா.

அருப்புக்கோட்டையில் பள்ளிப் படிப்பு முடித்து, திண்டுக்கல்லில், பொறியியலில் தகவல் தொழில் நுட்பம் படித்தேன். 10 வருடம் ஐ.டி துறையில் பணி புரிந்து இப்பொழுது குடும்பத் தலைவியாக உள்ளேன்.

**2. உங்களுக்கு எவ்வாறு 1330 குறள்கள் படிக்கும் எண்ணம் வந்தது?**

முதல் வருடம் நண்பர்களுடன் சாதாரணமாகப் படிக்க ஆரம்பித்தேன். வாழ்க்கையோடு ஒப்பிட்டு படிக்கும் போது, மிகவும் ரசித்து படிக்க முடிந்தது. படிக்க படிக்க ஆர்வம் வந்து வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கும் அனைத்துக் குறள்களையும் படித்து விட வேண்டும் என்ற எண்ணம் ஆழமாகப் பதிந்து விட்டது.

**3. பள்ளியில் திருக்குறள் படித்ததற்கும் இப்பொழுது படிப்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

பள்ளியில் படித்த போது நினைவாற்றல் மற்றும் அறிவுத் தேடலால் திருக்குறள், பசுமரத்தாணி போல மனதில் பதிந்தது. இப்பொழுது பொறுப்பு கூடிய இல்லற வாழ்க்கையில் ஞபாகத் திறனை சவாலாக ஏற்று சாதிக்க வேண்டியுள்ளது ஆனாலும், வள்ளுவரின் குறளில் இருந்த ஆழ்ந்த பொருளும் அதன் எளிமையும் என்னை கவர்ந்ததால், உணர்ந்து படிக்க முடிகிறது.



**4. 1330 குறள் படிப்பதற்கு எவ்வளவு நாட்கள் ஆனது, எவ்வகை யுக்தியைக் கையாண்டீர்கள் ?**

முதல் ஆண்டு 80 குறளும் இரண்டாம் ஆண்டு 580 குறளும், மூன்றாம் ஆண்டு 1330 குறளும் படித்தேன். அனைத்தும் படிப்பதற்கு நான்கு மாதங்கள் ஆகின.

ஒரு நாளைக்குப் பத்துக் குறள்கள் படிக்க வேண்டும் என்பது என் இலக்காக இருந்தது. அப்படி படிக்கும் பொழுது என்னால் மிகவும் எளிமையாக இலக்கை அடைய முடிந்தது.

**5. அடுத்து என்ன சாதிக்க நினைக்கிறீர்கள்?**

சாதி, மதம், மொழி கடந்து வாழ்க்கை நெறி சொல்லும் உலகப் பொதுமறையான திருக்குறளை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பயில்வதற்கு, மிகவும் எளிய முறையில் சொல்லித் தரவேண்டும் என நினைக்கிறேன்.

**6. உங்களுக்குப் பிடித்த குறள்?**

நாம் உயிர் வாழ நம் உடல் உறுப்பு ஒவ்வொன்றும் எவ்வளவு அவசியமோ, அதேபோல் நாம் சிறப்பாக வாழ்ந்து காட்ட, அனைத்துக் குறளும் நமக்கு அவசியமாக கருதுகிறேன். குறிப்பிட்டுச் சொல்லமுடியாத அற்புத படிவம் திருக்குறள்.

**7. BAKK அமெரிக்காவில் நடத்தி வரும் திருக்குறள் போட்டியின் 5வருட முயற்சி பற்றி உங்கள் கருத்து என்ன?**

என்னை ஊக்கப்படுத்தி 1330 குறளையும் படிப்பதற்கு மூலகாரணமாய் இருந்தது BAKK. வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் போட்டியிட வாய்ப்பு கொடுத்து, ஒழுக்கம், பொருமை, திறமை, தன்னம்பிக்கை, சகிப்புத்தன்மை போன்ற பண்புகளை போதிக்கும் விதமாக தொண்டாற்றிவரும் நமது சங்கத்தின் தன்னலமற்ற சேவை, இன்னும் பல ஆண்டு பலரையும் ஊக்குவித்து மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

# வள்ளுவம் தீட்டிய விரல்கள்






Abhinava Adithya Mahalakshmi Sivakumaran
Grade 3, Age 9, Sunnyvale, CA






Aaditri Badhrinath
Grade KG, Age 6,
San Jose, CA





Harini Nagappan
Grade 8, Age 13,
Mountain View, CA






Harshini Devi
Grade 4, Age 9
Mountain View, CA

# நம்மை நாம் அறிதல்

*- கனகலச்சுமி*

நாம், நம் குழந்தைப் பருவத்தில் உணர்ந்து செயல் படவேண்டிய செயல்கள் பல இருப்பினும், மனவுறுதி, தன்னம்பிக்கை என்ற இரண்டும் தான் இருபெரும் தூண்கள். அந்த தூண்கள் வளம் பெற,



"உன்னை அறிந்தால்...நீ
உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்"

என்ற கண்ணதாசனின் வரிகள் குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் எக்காலத்திலும் பொருந்தும்.

உலகில் அறத்துடன் வாழ வள்ளுவர் பல பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவற்றை எல்லாம் கூறிச் சென்றுள்ளார்..

உண்மையில் நீ யார் என்று அறிதல், உன் வலிமை என்ன என்று பலர் அறியவேண்டியதைக் காட்டிலும் நீ அறிந்து செயல்பட்டால் தன்னம்பிக்கையும், மனஉறுதியும் வலுப்பெறும். பெரியவர்களாக வளர்ந்தபோதும் அவை உன்னுள் மலர்ந்து நிற்கும்!

உடலுக்கு ஊக்கமில்லாத இனிப்பிற்காக குழந்தை அழுகிறது என்றால், தாய் தந்தையர், விளையாட்டுப் பொருள்களை தந்து அமைதிப்படுத்துவார்கள். அவற்றைப் பார்த்து குழந்தை தானாக அந்த இனிப்பை மறந்துவிடும்.

ஒரு விளையாட்டுக்குழு தன் வீரர்களை நன்கு பயிற்றுவித்து செம்மையாக விளையாட தயார் செய்துகொண்டு ஆட்டக்களத்தில் இறக்குகிறார்கள். ஆட்டக்களத்தில் மிகவும் திறமை வாய்ந்த வீரன் காயப்பட்டு விட்டார் என்றால் அந்த விளையாட்டு அத்துடன் நின்று போவதில்லை,



வீரர்கள் ஒவ்வொருவரின் தனி தனி திறமைகளை ஒருங்கிணைத்து, அணுகுமுறைகளை மாற்றி விளையாட்டை வெற்றிப்பாதையில் கொண்டு செல்வதை நாம் பலமுறை கண்டிருக்கிறோம்.

இதனையே வள்ளுவர்,

"பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்
சால மிகுத்தப் பெயின்" என்கிறார்.

மயில் தோகை என்றால் அதன் மென்மை, தன்மை, இதம் இவை மட்டும் நம் நினைவுக்கு வரும். அத்தகைய மயில் தோகை கொண்டு வலிமையான கருத்தை சிறிதும் பிசகாமல் வடிவமைத்தவர் வள்ளுவர்.

இதனை எண்ணுகையில் அவர் வாழ்ந்த காலம் வளமானதாக இருந்து, மயில்கள் பலகோடி இருந்திருக்க கூடும் அவைகளின் பீலிகள் வண்டிகளில் ஏற்றிச்செல்லப்பட்டு, அதன் அச்சு தாங்காது முறிந்ததை பார்த்திருக்கக்கூடும்.

வள்ளுவனின் பல குறள்கள் அவர்கண்ட காட்சியை குறளாக வரைந்ததுபோல் தோன்றுகிறது.

அது அப்படியிருக்கட்டும். நாம் நம் சிந்தனை குதிரையை மீண்டும் வலிமைக்குத் திருப்புவோம். கொண்ட வேலையை அதன் உருவம் கொண்டு மதிப்பிடாமல், உண்மைத்தன்மை அறிந்து மதிப்பிடவேண்டும். பல சிறு சிறு வேலைகள், திறமைகள் ஒன்று சேரும் போது தன் வலிமை கடலினும் பெரிதென்பதை மனதில் கொண்டு,

உன்னுள் இருக்கும் உயர்ந்த எண்ணங்களை எல்லாம் தொகுத்து நீ வெற்றி காணவேண்டும்.

சார்பில்லா எந்த செயலும் வெற்றிப்பாதை மட்டுமே காணும். விளையாட்டு வீரர்களின் கதையை திரும்பப் பாருங்கள், அங்கு வெற்றி மட்டும் நோக்கமாக, ஒருவர் காயப்பட்டது மட்டுமே வருத்தமாக, பலர் என்ன கூறுவார்கள் என்பதே மையமாக, பற்றுடன் கண்டால் வெற்றி பாதை வருமா?

அனைத்து உணர்வுபூர்வமான சிந்தனைகளை தவிர்த்து அறிவுபூர்வமாக, ஆக்கபூர்வமாக வழிநடத்திதான் வலியற்ற வெற்றி, வழியறிந்த வெற்றி காண முடியும். வள்ளுவன் தந்த குறள் வழி வெற்றியை அடைவோம்.

**NEW TRAINING BATCHES**
**Every Month 2016**

**THE BEST PROFESSIONALS HAVE NEVER STOPPED LEARNING**



OMEGA SOLUTIONS INC.
Innovations Never End

1900 LAFAYETTE ST,#245
SANTA CLARA
CA 95050

ZETA METRICS

1900 LAFAYETTE ST, #230
SANTA CLARA
CA 95050

*Omega Solutions is a Full IT Service Provider. It also helps professionals with upgrading their skills through in house training thus enabling them to expand their skill set and marketability. We provide training and placement services for technologies in CRM using Salesforce, Big Data using Hadoop, Data Analysis using SQL and Advanced SQL and Data Warehousing using Oracle Financial.*

***Contact us at: 408-988-8448***
***hr@omegasolutioninc.com***

*Zeta Metrics has a product focused approach as its growth model. The Data and Healthcare analytics divisions are driven by innovation and creativity to succeed. Our healthcare analytics platform provides doctors and patients ability to log, monitor and tune patients' dosages based on their symptoms.*

***Contact us at: 408 -791-3551***
***hr@ zetametrics.com***

We both are an E-Verify Company

salesforce · Google · accenture High performance. Delivered. · Volkswagen · maxim integrated. · ORACLE Gold Partner



FINEST QUALITY PRODUCTS
Jay Bharat

# Jay Bharat

Jay Bharat Restaurant – Indian Vegetarian Cuisine
"Home of the Gujarati and Kathiyawadi Thali"

**We Specialize in Gujarati cuisine & popular Indian street foods**
**We carry a large variety of sweets and namkeens**
**Let us cater your next social or business event**

**www.jaybharat.com**

Voted Best Indian Restaurant & Best Vegetarian Restaurant by Newark Connection 2015 - 2018.







**Northern California**
39203 Cedar Blvd, Newark, CA 94560
**510-494-9727**

**Southern California**
18701 Pioneer Blvd, Artesia, CA 90701
**562-924-3310**

# திருக்குறள் - உலகப் பொது நூல்

- ராஜகுமாரி நாகசாமி



முன்னுரை:- தமிழ் மொழியிலுள்ள அற நூல்கள் யாவற்றிலும் மிகச் சிறந்தது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் ஆகும். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாரதி பாராட்டுகின்றார். திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒரு அதிகாரத்திற்கு 10 குறள்கள் வீதம் 1339 குறள்கள் உள்ளன. 1 3/4 அடியுள்ள திருக்குறளில் கூறாத கருத்துக்களே இல்லை எனலாம்.

### உலகப் பொது நூல்:-

இந்நூல் இம்மையிலும், மறுமையிலும் நன்மை தரும். ஆறம், பொருள், இன்பம் ஆகியவற்றை செம்மையாக உணர்த்துகின்றது. ஒரு நாட்டினருக்கோ ஒரு மொழியினருக்கோ மட்டுமன்றி உலகம் முழுவதும் போற்றும், விரும்பும் அறங்களைக் கூறுவதால் பொதுமறை என போற்றப்படுகின்றது.

### பொது அறங்கள்:-

இறைவன் ஒருவன் உண்டு என நிறைய பேர் ஒத்துக்கொள்வர். ஆனால் வள்ளுவர் எப்பக்கமும் சாராது “இறை” என்ற பொதுச்சொல்லால் அழைப்பார். ஆதி பகவான் என்றும் எண்குணத்தான் என்றும் பொதுச்சொற்களாலேயே அழைப்பார். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், ஈதல், இசைபட வாழ்தல், அன்பு ஈனும் ஆர்வமுடைமை என்னும் அறங்கள் யாவும் உலகத்தார் போற்றும் அறங்களாகும்.

### அரசியல்:-

திருவள்ளுவர் அரசியல் நெறியை இறைமாட்சி என்னும் தொடரால் கூறுகின்றார். அரசியல் நெறி எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அறத்தினின்று வழுவாமல் அறமல்லாதவைகளை நடவாது தடுத்து வீரத்தில் குறைவில்லாதவனே அரசன் என்கின்றார்.

### பொருளியல்:-

பொருளியல் பற்றிப் பேசும் போது, பொருள் வரும் வழிகளை மென்மேலும் உருவாக்குதல், வரும் பொருளைத் தொகுத்தல், தொகுத்த பொருளைக் காப்பாற்றுதல், காப்பாற்றியவற்றை சீராக மக்களுக்குப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் சிறந்தவனே அரசன் என்று கூறுகின்றார். இதனை யாரால் மறுக்கமுடியும்?

மக்கள் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்த அன்பு, அடக்கம், இன்சொல், ஈகை, வாய்மை முதலிய பண்புகளைக் கொண்டு இவ்வுலகில் சிறப்பாக வாழ வேண்டும் என்று வள்ளுவர் கூறுவதில் மாறுபட்ட இரண்டாவது கருத்து இருக்க முடியாது. ஒருவருக்கொருவர் இவ்வுலகில் உதவியாக இருந்து வாழ வேண்டும் என்று கூறுகின்றார்.

திருக்குறள் அறத்துப்பாலில் இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற மூன்று பகுதிகளையும், பொருட்பாலில் அரசியல், அமைச்சியல், நடப்பியல், குடியியல் ஆகியவற்றையும் விளக்கிக் சிறந்த சமுதாய நெறிகளை எடுத்துக் காட்டுகின்றது.

திருக்குறள் அறத்துப்பாலில் இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற மூன்று பகுதிகளையும் பொருட்பாலில் அரசியல், அமைச்சியல், நடப்பியல், குடியியல் ஆகியவற்றையும் விளக்கிச் சிறந்த சமுதாய நெறிகளை எடுத்துக் காட்டுகின்றது.

இன்பத்துப்பாலில் ஒருவனுக்கு ஒருத்தியென வாழும் வாழ்க்கை, நாகரிக வாழ்க்கை, மனித வாழ்க்கை என்று சிறப்பாக போற்றுகின்றது.

### முடிவுரை:-

உலக மக்கள் அனைவரும் ஏற்குமாறு திருவள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறளை எல்லோரும் கற்க வேண்டும். இதனை அறநூலாக்கிக் குறள் நெறி பரப்பினால் இவ்வுலகம் அமைதியாகப் பூசலின்றி வாழ முடியும்.

----

ராஜகுமாரி நாகசாமி அவர்கள், முன்னாள் மாநிலத்தலைவி அங்கன்வாடி பணியாளர் சங்கம், தமிழ் நாடு. முன்னாள் விருதுநகர் மாவட்ட மகளிர் அணித்தலைவி, தமிழ் நாடு அரசு ஊழியர் ஒன்றியம்.


LUNCH BUFFET
EVERDAY
Catering
For All
Occasions
ULAVACHARU
Traditional Indian Cuisine
408-310-3111/408-966-3699
Available
100+ People
Party Hall
NO
MSG
HALAL
www.ulavacharuusa.com
685 E El Camino Real Sunnyvale, CA,94087

# நன்னயம் செய்தல்

*- அழகுதன்யா ஸ்ரீனிவாசன், வயது 5*






அன்று வகுப்பறையில் பெண் குழந்தைகளும், ஆண் குழந்தைகளும் தனித்தனிக் குழுவாய் பிரிந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது ஆண் குழந்தைகள் குழுவில் இருந்த ஷிவாவும், ஜீவனும் பெண் குழந்தைகள் குழுவிலிருந்த ஒலிவியாவை தங்கள் குழுவினரோடு தான் நீ விளையாடவேண்டும் என்று அழைத்துக் கொண்டனர். ஆண் குழந்தைகளிடம் ஒலிவியாவை எங்களோடு விளையாட விட்டுவிடுங்கள் என பெண் குழந்தைகள் கேட்டனர். ஆனால் பெண் குழந்தைகள் எவ்வளவோ சமாதானமாக பேசிப்பார்த்தும் அதற்கு அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. பிடிவாதமாக முடியாது என்று வம்பு செய்தனர். உடனே பெண் குழந்தைகள் அனைவரும் கூடிப் பேசி ஆண் குழந்தைகள் அனைவருக்கும் பிடித்தமானதாக தங்களிடம் இருந்த லைட்னிங் மெக்குவின் கார் பொம்மையை பரிசாக அளித்தனர். அதை கொடுத்த பின்னர் அவர்கள் ஒலிவியாவை பெண் குழந்தைகளுடன் விளையாட விட்டு விட்டனர். நாம் ஒலிவியாவை வலுக்கட்டாயமாக நம்மோடு விளையாட இழுத்து கொண்டோம் ஆனால் பெண் குழந்தைகளோ நமக்கு பிடித்தமான விளையாட்டு பொருளை கொடுத்து நம்மை மகிழ்வித்தனர் அவர்களை மனம் வருந்தச் செய்தோம் என்று நினைத்து வருந்தி பெண் குழந்தைகளிடம் மன்னிப்பு கேட்டனர். பின் அவர்களும் பெண் குழந்தைகளுடன் பகிர்ந்து விளையாடினர். இதையே திருவள்ளுவர்.

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்ற திருக்குறளில் எழுதி இருக்கிறார்.

# திருக்குறளின் பெருமை

*- மிருதுளா மோகன்குமார், வயது 12*



எந்த நோக்கில் பார்த்தாலும் அந்த நோக்கத்திற்கான போக்கையும், எந்த சிக்கலை கூறினாலும் அந்த சிக்கலுக்கான தீர்வையும், எந்த கேள்வியை கேட்டாலும் அந்த கேள்விக்கான பதிலையும் கூறும் கருத்துப் புதையல் திருக்குறள்.

தமிழின் முதல் எழுத்தான 'அ' வில் 'அகர முதல எழுத்தெல்லாம்' என ஆரம்பித்து கடைசி எழுத்தான 'ன்' ல், 'கூடி முயங்கப் பெறின்' என முடியும்.

திருக்குறளில் சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் நேற்று, இன்று, நாளை என்று, இனி வரும் எல்லா காலங்களுக்கும் பொருந்தும்.

மண் செழிக்க மழை பொழிவது போல் இந்த உலகம் செழிக்க குறள் காட்டும் அறவழியில் நாம் நடப்போம் என உறுதி கொள்வோம். வாழ்க வள்ளுவம்!!!





Vickramvel Ananthakumar
Grade 7, Age 12, Livermore, CA





Tanishka Pandiarajan Sankar
Grade KG, Age 5
Sunnyvale, CA







Subiksha Shri Palanisamy Mythili
Grade 2, Age 7, Sunnyvale, CA

# திருக்குறள் துளிகள்

*- ஜெயலக்ஷ்மி சரவணன்*

- மனிதனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைப் பாடம்.
- எத்தனை எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் மாற்றங்கள் இல்லாமல் நமக்கு இருவரிகளில் முப்பாலும் கலந்து தந்த அக்கால "ஹைக்கூ" கவிதை.
- தமிழ் என்ற தங்க கிரீடத்தில் பதிக்கப்பட்ட கோஹினூர் வைரம்..
- தமிழ் என்ற வார்த்தையையே உபயோகிக்காமல் தமிழனால் தமிழில் படைக்கப்பட்ட அதிசயம்.
- கி.மு.இரண்டாம் நூற்றாண்டிலேயே உலக மக்களின் தேடல்களுக்கு தெளிவான விடையளிக்க தமிழனால் உருவாக்கப்பட்ட "கூகுள்".
- நமது எந்த சந்தேகத்திற்கும் ஏழே வார்த்தைகளில் விடையளிக்கும் விந்தைப் புத்தகம்.
- தமிழின் முதலெழுத்தான "அ" வில் ஆரம்பித்து முடிவெழுத்து "ன்" இல் முடித்த அதிசய சொற்களஞ்சியம்.
- அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தும் விஞ்ஞானம் முதல் அண்ட சராசரங்களின் அற்புதம் நிறைந்த பிரபஞ்சத்தின் மெஞ்ஞானத்தையும் உணரவைப்பது.
- தனியொருவரைக் குறிப்பிட்டு உயர்த்தியோ தாழ்த்தியோ கூறாமல் உலக நாகரீகத்தின் முதன்மை வளர்ச்சி பெற்ற அக்கால தமிழர்களின் பாரம்பரிய பெருமையை எக்காலத்திலும் தலைநிமிர்த்தி கூறும் உலகப் பொதுமறை.
- இவ்வுலகில் மனித இனம் வாழும் காலம்வரை மறையாது வாழும் தகுதி பெற்றது திருக்குறள்.

மதிப்பிற்குரியவர்களுக்கு "திரு" என்ற அடைமொழியிட்டு வழங்குவது தமிழர் பண்பாடு. இன்று வரை உண்மை பெயரை அறியாமல் பலராலும் பல பெயர்களால் வழங்கப்பட்டு, உலக அரங்கில் ஒங்கி ஒலிக்கும் இந்நூலிற்கு மதிப்பளித்து நம்முன்னோர்கள் "திருக்குறள்" என்ற பெயர் சூட்டி பெருமையளித்தார்கள்.

எனக்கு மிகவும் பிடித்த குறள் :

"செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்"

விளக்கம் :

அறிந்து கொள்ள வேண்டியவற்றை அறிந்து அதற்கேற்ப அடக்கத்துடன் நடந்து கொள்பவரின் பண்பு நல்லவர்களால் உணரப்பட்டு அவருக்கு பாராட்டுகளும் பெருமையும் சேர்ந்திடும்.

இறுதியாக திருக்குறளைப் பற்றி என் தந்தை எனக்குக் கூறியதை பதிவிட்டு முடிக்கிறேன் ..

- வாழ்வியல் அர்த்தம் உணர்த்தும் குறள் ஒவ்வொன்றும் ஒன்றே "முக்கால் அடி".
- வாழ்வில் இதை அறியாது நடப்பவருக்கு கிடைத்திடுமே "சவுக்கடி".
- உன் வாழ்வில் இதை நீ அறிந்து நடந்தால் என்றென்றும் உனக்கு "பெருமையடி".


# பொய்யாமொழி

*- ஜலத்தூர கிருஷ்ணசாமி, பொள்ளாச்சி*

ஒன்றரை அடியிலான
உயிரோவியயம்
உலகமக்களுக்கான
ஒருவேதநூல்
அறிவுரையின் அற்புதங்கள்
கொண்ட ஒரு பெட்டகம்
இன மொழி மதம் கடந்த
ஒரு பொக்கிஷம்

காலத்தால் அழிக்க இயலாத
கண்ணாடிப் பேழை
சொல்லாதது எதுவுமில்லை
இனி சொல்லவேண்டியது
எதுவுமில்லை
மேற்கோள் காட்ட கிடைத்த
ஒரு புதையல்
தன்னிகரில்லா தமிழுக்கு
ஒரு தெய்வீக நூல்

இதழ்கள் இணையா
வரிகளுமுண்டு
இடித்துச் சொல்கிற
வார்த்தை களுமுண்டு
தொட்டாலே இனிக்கிற
சந்தனப் பேழை
தொடாமல் விட்டாலோ
பலன்கிடையா கோழை


NATURE
MILLS
உலகப்
பொதுமறை
கற்போம்! கற்பிப்போம்!!
சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.
Free Shipping for orders over $50.
Shop @ naturemills.com
info@naturemills.com
/nature_mills
/naturemills
/nature_mills

# எனக்கு ஏன் திருக்குறள் பிடிக்கும்?

- *ரிஷி சந்திரசேகர், வயது 12*



எனக்கு ஆறு வயது இருக்கும்போது தான் நான் முதன்முதலில் திருக்குறள் கற்க ஆரம்பித்தேன். என் தமிழ்ப் பள்ளியில் குறள் போட்டி ஒன்று நடந்தது. 20 குறள்களை ஒப்பித்து, முதல் பரிசு பெற்றேன். அப்பொது தான் திருக்குறளின் மீது எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக நிறையக் குறள்களைப் படிக்க முயன்றேன். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு விரிகுடா கலைக்கூடம் புதிதாக குறள் போட்டி ஒன்று ஆரம்பிக்க, அந்த வாய்ப்பை பயன்படுத்தி நானும் என் அம்மாவும், தினம் இரண்டு குறள் என படித்து, சுமார் ஒரு நூறு குறள்களை போட்டியில் பங்கேற்பதற்காக கற்றோம். ஒவ்வொரு வருடமும் தவறாமல் நான் இந்த போட்டியில் கலந்து கொண்டு வருகிறேன். இந்த வருடம் இருநூற்றி அறுபது குறள்கள் படித்து வைத்திருக்கின்றேன்.

எனக்கு இந்த போட்டியில் கலந்துகொள்ளும் ஆர்வத்தின் காரணம், பரிசு தொகை மட்டும் அல்ல, படிக்க படிக்க அதன் மீது ஏற்பட்ட ஈடுபாடும் ஒரு காரணம். ஒவ்வொரு குறளும் வாழ்க்கை பாடத்தை கற்பிக்கின்றன. நான் எப்படி படிக்க வேண்டும், எவ்வாறு நண்பர்களுடன் நடந்து கொள்ள வேண்டும், என் பெற்றோர்களுக்கு மரியாதை தர வேண்டும், என்றெல்லாம் இந்த குறள்களின் மூலம் அறிந்து கொண்டேன். எப்போதும் பொய் சொல்லகூடாது என்றும், அன்பு நம் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியம் என்றும் அறிந்துகொண்டேன்.

இது வரை நான் படித்ததிலேயே எனக்கு மிக பிடித்த இரண்டு குறள்களை உங்களுக்கு நான் சொல்லப் போகின்றேன்.

முதல் குறள்:

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று"
குறள் எண் : 100

பொருள் : ஒரு தட்டில், நாம் உண்ணுவதற்க்கு இனிக்கும் பழங்களும் கூடவே கசக்கும் காயும் இருக்கும்போது, நாம் காயை எடுத்து உண்ண மாட்டோம். காய் சாப்பிட நன்றாக இருக்காது. ஆனால் பழமோ இனிப்பாக, சாப்பிட சுவையாக இருக்கும். நாம் பழத்தை தான் எடுத்து தின்போம். அதே போல் தான், நம் தமிழில் இனிமையான வார்த்தைகள் நிறைய இருக்கின்றன. பேசும்போது அதை தான் பயன்படுத்த வேண்டும். அதற்குப் பதில், தகாத வார்தைகளையோ, இன்னொருவர் மனதை புண்படுத்தும் வார்தைகளையோ பயன்படுத்தக்கூடாது. அப்படி பயன்படுத்தினால், இனிக்கும் பழங்களை விட்டு விட்டு, காயை உண்பது போல் ஆகும். இந்த குறளின் படி, நானும் இப்பொழுது பேசும்போதெல்லாம், முடிந்த அளவிற்கு இனிய சொற்களையே பயன்படுத்துகின்றேன்.

இரண்டாம் குறள்:

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
நான நன்னயம் செய்துவிடல்" குறள் எண் : 314

பொருள்: நமக்கு ஒருவர் தீங்கு செய்தால், நாம் திரும்பவும் அதையே செய்யாமல், நல்ல செயலை செய்தால், அவர் தாம் செய்த தீமையை எண்ணி வருந்துவார், உடனே திருந்திவிடுவார். இந்த குறள் எனக்குப் பள்ளியில் பல நண்பர்களைப் பெற்றுத்தந்தது. முன்பெல்லாம், யாராவது என்னைத் திட்டிவிட்டாலோ, அல்லது எனக்கு உதவி செய்ய மறுத்தாலோ, நான் மிகவும் கோபம் அடைவேன். நான் திரும்ப அவர்களுக்கு உதவவே மாட்டேன். ஆனால், இந்தக் குறளைப் படித்த பின், தீங்கு நினைப்பவர்களுக்கும் நன்மையே செய்கிறேன். அதனால், அவர்களும் திருந்தி என் நண்பர்களாக உள்ளனர்.

எனக்கு பிடித்த இந்த இரண்டு குறள்கள் உங்களுக்கும் பிடித்திருக்கும் என நினைக்கிறேன். நீங்களும் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள்களை படித்து அதன்படி வாழ்கையில் நடந்து கொள்ளுங்கள்.




குறள் சொல்லும் குரலோடு

# வள்ளுவம் தீட்டிய விரல்கள்





Smriti Krishna
Grade 3, Age 9
San Ramon, CA





Sirseelan Mugilan
Grade 4, Age 9,
San Ramon, CA

## திருக்குறள் விழா 2018

சென்ற ஆண்டின் திருக்குறள் விழாவிற்கு வந்திருந்து திருக்குறளின் பெருமைபோற்றிய பார்வையாளர்கள், குழந்தைகளின் பல்வேறு சிறப்புக் கலைநிகழ்ச்சிகள்.













# இன்றைய தலைமுறையின் கைகளில் குறள்

திருக்குறள் விழா 2018ல் - குறள் விழா அது எங்கள் விழா எனக்
குதூகலிக்கும் குழந்தைகளின் வண்ணப்படங்களுள் சில



















MALAIKOTTAI
حلال
HALAL
Indian Chettinad Restaurant
Newpark Plaza
5988 Newpark Plaza, New Park Mall Rd, Newark, CA
(Opp. to Newpark Mall & next to Bhindi Jewelers)
We deliver food at your doorsteps. Order thru doordash.com
DOORDASH
delightful delivery
Check out our weekend specials
ஆம்பூர் சிக்கன் மற்றும் மட்டன் பிரியாணி, நாட்டுக்கோழி குழம்பு, நாட்டுக்கோழி ரோஸ்ட், கீரை வடை, பன்னீர் 65, ஸ்பிரிங் ரோல்ஸ், மீன் வறுவல் (முழு), கோழிகால் வறுவல் மற்றும் சுவையான பல வகைகள்...
We do onsite Aappam and Dosa
Call us for Catering
Tel: 510.797.2166 & 510.797.2167
www.malaikottai.com
Business Hours:
Monday to Thursday - 11:30 AM to 2:30 PM & 6:00 to 10:00 PM
Friday and Saturday - 11:30 AM to 3:00 PM & 6:00 to 10:30 PM
Sunday - 11:30 AM to 3:00 PM & 6:00 to 9:30 PM
Like us on facebook
FIND US ON yelp

# புலால் மறுத்தல்

*- ஹரிணி சதிஷ்குமார்*



என்னுடைய பெற்றோர் சைவ உணவு பழக்கத்தை பின்பற்றுபவர்கள். அதனால் நானும் சைவ உணவே சாப்பிடுவேன். எனது பள்ளியின் உணவுக்கூடத்தில் வித விதமான உணவுப்பண்டங்களை பார்க்கும் பொழுது நாவில் எச்சில் ஊறும். நான் எனது அம்மாவிடம் இதை பற்றி பேசிய பொழுது அவர் சிரித்துக்கொண்டே, “இவ்வளவு ஆசையை கட்டுபடுத்திக்கொண்டு சைவ உணவுப் பழக்கத்தை பின்பற்றுவது கடினம். பூமியில் உள்ள எல்லா உயிர்களுக்கும் அவர்களுடைய வாழ்கையை வாழ்வதற்கான அதிகாரம் உள்ளது. அதுவே, நாம் சைவமாக இருப்பதற்கு காரணம். நீயும் உனது காரணத்தை தேடிக்கொள். அதன் பிறகு உனக்கு அசைவ உணவின் மீது ஆசை வராது” என்றார்.

சில நாட்களுக்கு பிறகு நான் என் அம்மாவுடன் என்னுடைய மனதிற்கு விருப்பமான குறள்களைப் புத்தகத்தில் தேடிக்கொண்டு இருந்தேன். அப்போது, “புலால் மறுத்தல்” என்ற அதிகாரத்தைகண்டு ஆச்சரியம் அடைந்தேன். அதிலிருந்து சில குறள்களைத் தருகிறேன்.

“தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.”

பொருள் : தன் உடலை வளர்ப்பதற்காக, பிறிதோர் உடலை தின்கின்றவன், கருணையற்றவன் ஆவான்.

“செயிரின் தலைப்பிரிந்த காட்சியார், உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.”

பொருள் : குற்றத்திலிருந்து நீங்கிய அறிவுடையோர், உயிர் வழிவந்த உடலை ஒரு போதும் உண்ணமாட்டார்கள்.

அதாவது,

“அன்பின் வழியது உயிர்நிலை, அதிலார்கு
என்புதோல் போர்த்திய உடம்பு.”

உயிருக்கே ஆதாரமான அன்பை, எல்லா உயிர்களிடமும் செலுத்துவதுதான் முறை.




Santa Clara location
777 Lawrence Expressway Blvd
Santa Clara, CA 95051
*Thank you for your support*



ANJAPPAR
Chettinad Indian Restaurant

**Chettinad Indian Restaurant**

458 Baber Lane, Milpitas, CA 95033
**TEL: (408) 435.5500**
E-mail: info@anjapparca.com
Web: www.anjapparca.com

Business Hours: Mon - Fri 11:30 PM - 2:30 PM | 6:00 PM - 10:00 PM | SAT, SUN: 11:30 AM - 10:00 PM

**KUMAR NALLUSAMY**
Your Real Estate Resource




INTERO
REAL ESTATE SERVICES®
*Independently Owned and Operated*



**Kumar Nallusamy**
BROKER-ASSOCIATE®
**510.364.8016**
NallusamyKumar@gmail.com

LEADING REAL ESTATE COMPANIES® of THE WORLD
LUXURY PORTFOLIO INTERNATIONAL®

2015 Intero Real Estate Services, Inc. All rights reserved. The logo is a registered trademark of Intero Real Estate Services, Inc. Information deemed reliable but not guaranteed. This is not intended as a solicitation if you are listed with another broker. Cal BRE #01924633

# திருக்குறள் ஓர் உலகப் பொதுமறை

- ஷண்முகப்ரியா

மனித வாழ்கையை செம்மைப்படுத்தி நல்லாற்றுப்படுத்தும் நூல்களுள் திருக்குறள் தலைசிறந்து விளங்குகின்றது. காலத்தாலும், மதத்தாலும், மொழியாலும் கடந்து நிற்கும் இந்நூல், உலக மொழிகளிலெல்லாம் மொழி பெயர்க்கப்பட்ட பெருமை உடையது. ஏரியல் என்னும் மேலை நாட்டறிஞர் இந்நூலினை,

“மனித இனத்தின் சிந்தனையில் முகிழ்ந்த சிறப்பும் தூய்மையும் வாய்ந்த இலக்கியப் பெட்டகம்“ என்று போற்றுகிறார்.

திருக்குறளில் அமைந்துள்ள நுட்பத்தையும், திட்பதையும், மாண்பையும் கண்டு போற்றாதவர்கள் இலர்.

“உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்”

என்னும் பாரதியாரின் மொழிக்கேற்ப, திருவள்ளுவர் தம் உள்ளத்திலிரிந்து எழும் உண்மைகளை உணர்த்துகிறார்.

காலம் பல சென்றிடினும், அம்மொழிகள் படிப்போர் உள்ளத்தைப் பண்படச்செய்யும். கருதுவோர் உள்ளத்தில் மெய்ம்மையையும், அறத்தையும் நாட்டும்.

இலக்கியத் திறனாய்வாளர்கள், ஒவ்வொரு சாராரும், தத்தமது துறைக்கு ஏற்றக் கருத்துக்களைத் திருக்குறளில் காணலாம், என்கிறார் டாக்டர். மு. வ. அவர்கள்.

“அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்”

என்று திருக்குறளின் பெருமையைப் பாராட்டுகிறார் ஔவையார்.

முதற்கண் திருக்குறள் எல்லா சமயங்களுக்கும் பொது நூலாகக் காட்சியளிக்கிறது.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்“ (குறள் எண் : 972)


என்ற குறளின் பொருள் மேன்மை காரணமாக, தமிழ் இலக்கியத்தின் பால் ஆர்வம் கொண்டு டாக்டர் ஜி. யு. போப், ஆல்பர்ட் அவிட்சர் போன்ற பெரியோர்கள் திருக்குறளின் பெருமையைப் பாராட்டியுள்ளனர். இத்தகைய சிறப்பு வேறெந்த தமிழ் நூலுக்கும் இல்லை எனலாம்.

‘ஒன்றே குலம்‘ என்பது தமிழர் பண்பாட்டினின்றும் முகிழ்த்த ஒரு பெருங்குறிக்கோள். திருக்குறளின் உள்ளுறை, நுண்ணியதாய் பல பேரறிஞரிடம் சென்று பல மொழிகளில் பரிணமித்தது. இவ்வாறு திருக்குறள் கருத்துக்கள் பெருகி, இந் நாளில் விஞ்ஞானத்தில் விரவி, மார்க்சியமாகவும், தெய்வீகத்திற் கலந்து காந்தியமாகவும் பரவியுள்ளது. விஞ்ஞான மார்க்சியமும், தெய்வீகக் காந்தியமும் ஒன்றிய ஒரு கொள்கையே இக் கால உலகை ஒருமைப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. இதை உணர்ந்து தொண்டாற்ற நாம் முற்பட்டால் உலகம் நலம் பெறும்.

# குறள் சொல்லும் படம்

- ஹேமா கண்ணன்



# ஸ்ரீ Ananda Bhavan

## Indian Vegetarian Restaurant

# We do Catering for Wedding Events and Onsite Dosa Party





**SUNNYVALE**
920E Arques Ave,
Sunnyvale, CA 94085
408-735-1111

**MILPITAS**
61, Serra Way #120
Milpitas, CA 95035
408-791-6664

**PLEASANTON**
4515 Rosewood Dr Unit 700,
Pleasanton, CA 94588
925-924-1122

**CUPERTINO**
10745, S De Anza Blvd,
Cupertino, CA 95014.
408-850-0141

**AUSTRALIA**
70-78 Vesper Drive
Narre Warren, VIC-3805
(03) 8786 5551

www.AnandaBhavanUSA.com info@anandabhavanusa.com



INDIA CASH & CARRY
INDIA
CASH & CARRY
Happy Holi
ALWAYS FRESH!
1138
South De Anza Blvd
SAN JOSE
Ph: 408.253.7384
1032
East El Camino Real
SUNNYVALE
Ph: 408.735.7383
39175
Farwell Dr.
FREMONT
Ph: 510.792.7383
All Major Credit Card Welcome!
HOLI COLORS AVAILABLE
We are Closed
Foster City Location In
February - March 2019
Opening Our New Foster City
Location
750 Alma Lane, Suite 115
Foster City, CA 94404.
Ph: 650.212.0608
Sorry for the Inconvenience
- India Cash & Carry Management
OPEN 7DAYS
Every Fresh Vegetbles with Low Prices.
Hours of Operation: Mon - Sun :9:00am - 10:00pm
www.indiacashandcarry.com